# ACCOUNTING

தேர்ச்சி 10



PAST PAPER 2011-2018

# பங்குடைமை

G.C.E -A/L

# PARTNERSHIP

MR. V.S.KUMARAN *B.Com (Acc) Spl. Dip. in. Edu*

J/VAYAVILAN CENTRAL COLLEGE

**வினா இல** 01

ஒரு பங்குடைமையில் மாதா, பிதா, குரு என்போர் பினாவரும் உடன்படிக்கையின் கீழ் பங்காளர்கள் ஆவார்.

1. பங்காளருக்கிடையிலான இலாபநட்ட விகிதம் 5:3:2
2. பங்காளர் மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டி
3. பங்காளர்நடைமுறைக்கணக்கின் ஆரம்ப மீதிக்கு 15% வட்டி
4. பங்காளர் ஒவ்வொருவருக்கும் ஆண்டுச் சம்பளங்களாக முறையே ரூ 25000, ரூ 20000, ரூ 15000 வழங்கப்பட வேண்டும்.

இப் பங்குடைமையின்ஏடுகளில் 1.4.2017 இல் உள்ள மீதிகள் வருமாறு

| | மூலதனக் கணக்கு ரூபா | நடைமுறைக் கணக்கு ரூபா |
|---|---|---|
| மாதா | 180000 | 12000 |
| பிதா | 120000 | 10000 |
| குரு | 100000 | (8000) |

31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம் ரூ 184000

31.3.2018 இல் பங்காளர் முறையே ரூ 8000, ரூ 6000, ரூ 4000 தொகைகளை காசாக பற்றியிருந்தனர்.

**வேண்டப்படுவது**

1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட பகிர் கணக்கு**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு**

**வினா இல** 02

ஒரு பங்குடைமையில் சாம், ராம், ஜேம் என்போர் பினாவரும் உடன்படிக்கையின் கீழ் பங்காளர்கள் ஆவார்.

1. பங்காளருக்கிடையிலான இலாபநட்ட விகிதம் 2:2:1
2. பங்காளர் மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 8% வட்டி
3. பங்காளர்நடைமுறைக்கணக்கின் ஆரம்ப மீதிக்கு 10% வட்டி
4. பங்காளர் ஒவ்வொருவருக்கும் மாதாந் சம்பளங்களாக முறையே ரூ 2000, ரூ 3000, ரூ 1500 வழங்கப்பட வேண்டும்.
5. பங்காளர் கடனுக்கு ஆண்டுக்கு 12% வட்டி

இப் பங்குடைமையின்ஏடுகளில் 1.4.2017 இல் உள்ள மீதிகள் வருமாறு

| | மூலதனக் கணக்கு ரூபா | நடைமுறைக் கணக்கு ரூபா | கடன் |
|---|---|---|---|
| சாம் | 250000 | 20000 | - |
| ராம் | 200000 | (5000) | 75000 |
| ஜேம் | 150000 | 15000 | - |

**மேலதிக தகவல்கள்**

1. 31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன் வட்டி தாக்கல் செய்யமுன் பெறப்பட்ட தேறியலாபம் ரூ 224000
2. சாம், ராம் ஆண்டுகாலத்தில் முறையே ரூ 12000, 10000 பண்டங்களை தமது சொந்த தேவைக்காக பற்றினர் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
3. சாம் பங்குடைமைக்காக தனது சொந்தப் பணத்திலிருந்து செலுத்திய ரூ 4000 மின்சாரக்கட்டனம் தொடர்பில் பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.
4. இப் பங்குடைமை ராமின் கட்டிடத்தில் தொழிற்படுகின்றது ராமுக்கு மாதாந்தம் ரூ 500 வழங்கப்படவேண்டும் ஆண்டுகாலத்தில் வாடகை எதுவும் செலுத்தப்படவுமில்லை பதியப்படவுமில்லை.

**வேண்டப்படுவது**

1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட சீராக்ககூற்று**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட பகிர் கணக்கு**
3. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு**

**வினா இல** 03

ஒரு பங்குடைமையில் ராதா, சீதா, மாதா என்போர் பினாவரும் உடன்படிக்கையின் கீழ் பங்காளர்கள் ஆவார்.

1. பங்காளருக்கிடையிலான இலாபநட்ட விகிதம் 2:1:1
2. பங்காளர் மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 6% வட்டி
3. பங்காளர்நடைமுறைக்கணக்கின் ஆரம்ப மீதிக்கு 12% வட்டி
4. பங்காளர் ஒவ்வொருவருக்கும் காலாண்டுச் சம்பளங்களாக முறையே ரூ 4000, ரூ 5000, ரூ 6000 வழங்கப்பட வேண்டும்.
5. பங்காளர் கடனுக்கு ஆண்டுக்கு 10% வட்டி
   இப் பங்குடைமையின்ஏடுகளில் 1.4.2017 இல் உள்ள மீதிகள் வருமாறு

| | மூலதனக் கணக்கு ரூபா | நடைமுறைக் கணக்கு ரூபா | கடன் |
|---|---|---|---|
| ராதா | 200000 | 25000 | 40000 |
| சீதா | 150000 | 15000 | - |
| மாதா | 100000 | (10000) | 20000 |

**மேலதிக தகவல்கள்**

1. 31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன் வட்டி தாக்கல் செய்யமுன் பெறப்பட்ட தேறியலாபம் ரூ 192000
2. சீதா ஆண்டுகாலத்தில் முறையே ரூ 5000 பண்டங்களை தமது சொந்த தேவைக்காக பற்றினர் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
3. மாதா பங்குடைமைக்காக தனது சொந்தப் பணத்திலிருந்து மாதாந்தம் செலுத்திய ரூ 1000 மின்சாரக்கட்டனம் தொடர்பில் பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.
4. இப் பங்குடைமை ராதாவின் கட்டிடத்தில் தொழிற்படுகின்றது ராதாவுக்கு மாதாந்தம் ரூ 2000 வழங்கப்படவேண்டும் ஆண்டுகாலத்தில் 10 மாதவாடகை மாத்திரம் செலுத்தப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டது.
5. மாதாவின் சொந்த ஆயுள்காப்புறுதிக்கு பங்குடைமையால் செலுத்தப்பட்ட ரூ 4000 கட்டனமும் பங்குடைமையின் காப்புறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டது.

**வேண்டப்படுவது**

1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட சீராக்ககூற்று**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட பகிர் கணக்கு**
3. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு**

**வினா இல** 04

ஒரு பங்குடைமையில் கம்சா, வம்சா, இம்சா என்போர் பினாவரும் உடன்படிக்கையின் கீழ் பங்காளர்கள் ஆவார்.

1. பங்காளருக்கிடையிலான இலாபநட்ட விகிதம் 9:65
2. பங்காளர் மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 5% வட்டி
3. பங்காளர்நடைமுறைக்கணக்கின் ஆரம்ப மீதிக்கு 20% வட்டி
4. பங்காளர் ஒவ்வொருவருக்கும் காலாண்டுச் சம்பளங்களாக முறையே ரூ 5000, ரூ 4000, ரூ 3000 வழங்கப்பட வேண்டும்.
5. பங்காளர் கடனுக்கு ஆண்டுக்கு 8% வட்டி
   இப் பங்குடைமையின்ஏடுகளில் 1.4.2017 இல் உள்ள மீதிகள் வருமாறு

| | மூலதனக் கணக்கு ரூபா | நடைமுறைக் கணக்கு ரூபா | கடன் |
|---|---|---|---|
| கம்சா | 160000 | 15000 | 50000 |
| வம்சா | 120000 | 10000 | - |
| இம்சா | 80000 | (5000) | 100000 |

**மேலதிக தகவல்கள்**

1. 31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன் வட்டி தாக்கல் செய்யமுன் பெறப்பட்ட தேறியலாபம் ரூ 218000
2. வம்சா மாதந்தம் முறையே ரூ 500 பண்டங்களை தமது சொந்த தேவைக்காக பற்றினர் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
3. இம்சா பங்குடைமைக்காக தனது சொந்தப் பணத்திலிருந்து மாதாந்தம் செலுத்திய ரூ 1500 மின்சாரக்கட்டனம் தொடர்பில் பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.
4. இப் பங்குடைமை கம்சாவின் கட்டிடத்தில் தொழிற்படுகின்றது கம்சாவுக்கு மாதாந்தம் ரூ 1000 வழங்கப்படவேண்டும் ஆண்டுகாலத்தில் 15 மாதவாடகை செலுத்தப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டது.

5. வம்சாவின் சொந்த ஆயுள்காப்புறுதிக்கு பங்குடைமையால் மாதாந்தம் செலுத்தப்பட்ட ரூ 500 கட்டனம் பங்குடைமையின் காப்புறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டது.
6. பங்களர் ஒவ்வொருவரும் தமது ½ ஆண்டுச் சம்பளத்தை காசாக எடுத்திருந்தனர்.

**வேண்டப்படுவது**

1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட சீராக்ககூற்று**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட பகிர் கணக்கு**
3. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு**

**வினா இல** 05

ஒரு பங்குடைமையில் ராஜா, ராணி, மந்திரி என்போர் பினாவரும் உடன்படிக்கையின் கீழ் பங்காளர்கள் ஆவார்.

1. பங்காளருக்கிடையிலான இலாபநட்ட விகிதம் 5:32
2. பங்காளர் மூலதன மீதிக்கு மாதாந்தம் 0.5% வட்டி
3. பங்காளர்நடைமுறைக்கணக்கின் ஆரம்ப மீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டி
4. பங்காளர் ஒவ்வொருவருக்கும் காலாண்டுச் சம்பளங்களாக முறையே ரூ 4000, ரூ 3000, ரூ 2000 வழங்கப்பட வேண்டும்.
   இப் பங்குடைமையின்ஏடுகளில் 1.4.2017 இல் உள்ள மீதிகள் வருமாறு

| | மூலதனக் கணக்கு ரூபா | நடைமுறைக் கணக்கு ரூபா | கடன் |
|---|---|---|---|
| ராஜா | 175000 | 20000 | 40000 |
| ராணி | 155000 | 30000 | - |
| மந்திரி | 120000 | (10000) | - |

**மேலதிக தகவல்கள்**

1. 31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம் ரூ 245000
2. மந்திரி மாதந்தம் முறையே ரூ 250 பண்டங்களை தமது சொந்த தேவைக்காக பற்றினர் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
3. ராணி பங்குடைமைக்காக தனது சொந்தப் பணத்திலிருந்து மாதாந்தம் செலுத்திய ரூ 500 மின்சாரக்கட்டனம் தொடர்பில் பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.
4. இப் பங்குடைமை ராஜாவின் கட்டிடத்தில் தொழிற்படுகின்றது கம்சாவுக்கு மாதாந்தம் ரூ 750 வழங்கப்படவேண்டும் ஆண்டுகாலத்தில் 8 மாதவாடகை மாத்திரம் செலுத்தப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டது.
5. ராணியின் சொந்த ஆயுள்காப்புறுதிக்கு பங்குடைமையால் மாதாந்தம் செலுத்தப்பட்ட ரூ 1000 கட்டனம் பங்குடைமையின் காப்புறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டது.
6. பங்களர் ஒவ்வொருவரும் தமது ¼ ஆண்டுச் சம்பளத்தை காசாக எடுத்திருந்தனர். இவை பங்குமையின் சம்பளக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
7. 1.10.2017 இல் ஒவ்வொரு பங்காளரும் தமது இலாபநட்ட விகிதப்படி ரூ 100000 மூலதனமாக புகுத்தி மோட்டார் வாகனமொன்றை கொள்வனவு செய்தனர் இதன் இழிவுப்பெறுமதி ரூ 4000 பயனுள்ள ஆயட்காலம் 12 வருடம் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
8. பங்காளர் ஒவ்வொருவருக்கும் ½ வருட கடன்வட்டி செலுத்தப்பட்டுள்ளது. இத்தொகைக்கு மட்டுமே கணக்குப் பதிவுகள் இடம்பெற்றது. 1.1.2018 இல் ராணி ரூ 80000 தொகையை பங்குடைமைக்கு கடனாக வழங்கியிருந்தார்.
9. 31.3.2018 இருப்பின் பெறுமதி ரூ 2000 ஆல் கூட்டி மதிப்பிடப்பட்டது.
10. ஆண்டு காலத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ரூ 10000 பண்டங்கள் முழுமையாக அழிவடைந்தது இதில் 80மூ காப்புறுதி கம்பனி நட்டஈடாக தரமுன்வந்தது இது தொடர்பில் பதிவுகள் இடம்பெறவில்லை.

**வேண்டப்படுவது**

1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட சீராக்ககூற்று**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட பகிர் கணக்கு**
3. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு**

**வினா இல** 06

ஒரு பங்குடைமையில் அகில், முகில், திகல் என்போர் பினாவரும் உடன்படிக்கையின் கீழ் பங்காளர்கள் ஆவார்.

1. பங்காளருக்கிடையிலான இலாபநட்ட விகிதம் 5:32
2. பங்காளர் மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டி
3. பங்காளர்நடைமுறைக்கணக்கின் ஆரம்ப மீதிக்கு ஆண்டுக்கு 20% வட்டி
4. பங்காளர் ஒவ்வொருவருக்கும் காலாண்டுச் சம்பளங்களாக முறையே ரூ 5000, ரூ 4000, ரூ 3000 வழங்கப்பட வேண்டும்.
5. பங்காளர் கடனுக்கு ஆண்டுக்கு 8% வட்டி வழங்கப்பட வேண்டும்.

31/3/2018 இல் முடிவடைந்த நிதியாண்டின் இறுதியில் உள்ள பரீட்சைமீதி வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கொள்வனவு விற்பனை | 164500 | 401500 |
| உட்திரும்பல் வெளித்திரும்பல் | 5500 | 2500 |
| கடன்பட்டோர் கடன்கொடுநர் | 58000 | 38000 |
| அறவிடமுடியாக்கடன் ஐயக்கடன் ஏற்பாடு | 3000 | 2000 |
| 1/4/2016 இருப்பு | 33000 | |
| உட்சுமைகூலி | 3000 | |
| பெற்றகழிவு | | 5000 |
| காப்புறுதி | 8000 | |
| மின்சாரம் | 4000 | |
| சம்பளம் | 18000 | |
| பொதிகட்டும்பொருள் | 7500 | |
| விளம்பரம் | 5000 | |
| விற்பனைத் தரகு | 3000 | |
| வங்கிகட்டனம் | 1000 | |
| காசுமீதி | 290500 | |
| ப.மூலதனம் - அகில் | | 180000 |
| - முகில் | | 150000 |
| - திகில் | | 100000 |
| ப.நடைமுறைக் க/கு 1/4/2017 - அகில் | | 15000 |
| - முகில் | 10000 | |
| - திகில் | | 20000 |
| ப.பற்று - அகில் | 6000 | |
| - முகில் | 4000 | |
| - திகில் | 3000 | |
| முகில் கடன் | | 80000 |
| கட்டிடமும் தே.ஏற்பாடும் | 200000 | 48000 |
| மோட்டார் தே.ஏற்பாடும் | 160000 | 36000 |
| பொறி இயந்திரம் தே.ஏற்பாடும் | 120000 | 32000 |
| முகில் கடன்வட்டி | 3000 | |
| | **1110000** | **1110000** |

**மேலதிக தகவல்கள்**

1) *31/3/2018* இல் உள்ளவாறான இருப்புக்கள் 46000 ஆகும். இதில் பழுதடைந்த பொருள் ரூபா 4000 உள்ளது இதனை ரூபா 3000 மதிப்பில் எடுக்க தீர்மானிக்கப்பட்டது.
2) காப்புறுதியில் ரூபா 2000 ம், மின்சாரத்தில் ரூபா 1000 ம் தீர்க்கப்படாதுள்ளதுடன் பொதிகட்டும் பொருளில் 1500 பயன்படுத்தப்படாதுள்ளது.
3) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
   கட்டிடம் 4% மோட்டார் 8% பொறி 10%
4) அறவிடமுடியாக்கடனாக மேலும் ரூபா 2000 பதிவளிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டை எஞ்சிய கடன்பட்டோரில் 8% சீராக்குக
5) *19/11/2017* இல் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் ரூபா 5000 கிரயமான பண்டங்கள் அழிக்கப்பட்டன இவற்றின் கிரயத்தில் 80% காப்புறுதிக் கம்பனி நட்டஈடாக தர முன்வந்தது.
6) *31/12/2017* இல் ரூபா 20000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று பண்டக் கொள்வனவாக பதிவிடப்பட்டுள்ளது.
7) *30/6/2017* இல் திகில் என்பவர் ரூபா 3000 கிரயமான பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
8) பங்காளர்கள் ஒவ்வொருவரும் தமது காலாண்டுச் சம்பளங்களை காசாக எடுத்திருந்தனர் இவை காசேட்டிலிருந்து சம்பளக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.

9) விற்பனை செய்க அன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் அனுப்பப்பட்ட ரூபா 18000 பெறுமதியான பண்டங்கள் முழுவதும் விற்பனையாக பதியப்பட்டுள்ளது. இதில் 2/3 பகுதி மாத்திரம் 31.3.2018 இற்குள் விற்கப்பட்டது எஞ்சிய பண்டம் விற்கப்படாது வாடிக்கையாளர் வசமுள்ளது. இவை கிரயத்தில் 20% இலாபம் பெறக்கூடியது.
10) அகிலினது சொந்த ஆயுள்காப்புறுதிக்கு செலுத்திய ரூ 3000 பங்குடைமையின் காப்புறுதிக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.

**வேண்டப்படுவது**

1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக்கூற்றும் இலாபநட்ட பகிர்கணக்கும்**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு**
3. **31.3.2018 இல் நிதிநிலைமைக்கூற்று**

**வினா இல** 07

ஒரு பங்குடைமையில் சிவி, புவி, ரவி என்போர் பினாவரும் உடன்படிக்கையின் கீழ் பங்காளர்கள் ஆவார்.

1. பங்காளருக்கிடையிலான இலாபநட்ட விகிதம் 2:2:1
2. பங்காளர் மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 12% வட்டி
3. பங்காளர்நடைமுறைக்கணக்கின் ஆரம்ப மீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டி
4. பங்காளர் ஒவ்வொருவருக்கும் மாதாந்தச் சம்பளங்களாக முறையே ரூ 3000, ரூ 2000, ரூ 1500 வழங்கப்பட வேண்டும்.
5. பங்காளர் கடனுக்கு ஆண்டுக்கு 8% வட்டி வழங்கப்பட வேண்டும்.

31/3/2018 இல் முடிவடைந்த நிதியாண்டின் இறுதியில் உள்ள பரீட்சைமீதி வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கொள்வனவு விற்பனை | 172000 | 378000 |
| உட்திரும்பல் வெளித்திரும்பல் | 3000 | 2000 |
| கடன்பட்டோர் கடன்கொடுநர் | 47000 | 43000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | 2000 | 3000 |
| 1/4/2016 இருப்பு | 32000 | |
| பங்காளர் சம்பளம் | 39000 | |
| உட்சுமைகூலி | 4000 | |
| செயற்பாட்டுச் செலவு | 42000 | |
| காசுமீதி | 363000 | |
| ப.மூலதனம் - சிவி | | 200000 |
| - புவி | | 180000 |
| - ரவி | | 120000 |
| ப.நடைமுறைக் க/கு 1/4/2017 - சிவி | | 20000 |
| - புவி | 10000 | |
| - ரவி | | 15000 |
| ப.பற்று - சிவி | 5000 | |
| - புவி | 3000 | |
| - ரவி | 2000 | |
| ரவி கடன் | | 75000 |
| கட்டிடமும் தே.ஏற்பாடும் | 200000 | 52000 |
| மோட்டார் தே.ஏற்பாடும் | 150000 | 48000 |
| பொறி இயந்திரம் தே.ஏற்பாடும் | 100000 | 36000 |
| பெற்றவாடகை | | 4000 |
| ரவி கடன்வட்டி | 2000 | |
| | **1176000** | **1176000** |

**மேலதிக தகவல்கள்**

1) *31/3/2018* இல் உள்ளவாறான இருப்பு பதிவேட்டின்படி இருப்புக்கள் 52000 ஆகும்.
2) காப்புறுதியில் ரூபா 2000 ம், மின்சாரத்தில் ரூபா 1000 முடிவுறாதுள்ளது.
3) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.

கட்டிடம் 2% மோட்டார் 4% பொறி 5%

4) அறவிடமுடியாக்கடனாக மேலும் ரூபா 2000 பதிவளிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டை எஞ்சிய கடன்பட்டோரில் 10% சீராக்குக
5) *19/11/2017* இல் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் ரூபா 5000 கிரயமான பண்டங்கள் அழிக்கப்பட்டன இவற்றின் கிரயத்தில் 80% காப்புறுதிக் கம்பனி நட்டஈடாக தர முன்வந்தது. இவை தொடாபில் ஏடுகளில் பதிவெதுவும் இடம் பெறவில்லை.
6) *30/6/2017* இல் ரவி என்பவா் ரூபா 5000 கிரயமான பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
7) பங்காளா்கள் ஒவ்வொருவரும் தமது அரையாண்டுச் சம்பளங்களை காசாக எடுத்திருந்தனா் இவை காசேட்டிலிருந்து பங்காளா் சம்பளக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.

8) விற்பனை செய்க அன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் அனுப்பப்பட்ட ரூபா 24000 பெறுமதியான பண்டங்களில் 3/4 பகுதி மாத்திரம் 31.3.2018 இற்குள் விற்கப்பட்டது எஞ்சிய பண்டம் விற்கப்படாது வாடிக்கையாளா் வசமுள்ளது. இவை விற்பனை விலையில் 25% இலாபம் பெறக்கூடியது. அனுப்பப்பட்ட பண்டங்கள் தொடா்பில் இருப்பு பதிவேட்டில் கழிக்கப்பட்டதை தவிர வேறுபதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.
9) ரவியினது சொந்த ஆயுள்காப்புறுதிக்கு செலுத்திய ரூ 2000 பங்குடைமையின் காப்புறுதிக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.
10) இப் பங்குடைமை சிவியினது கட்டிடத்தில் தொழிற்படுகின்றது சிவிக்கு மாதாந்த கட்டிட வாடகையாக ரூ 1000 வழங்கப்படவேண்டும் ஆண்டுகாலத்தில் 10 மாதங்களுக்குரிய வாடகை மாத்திரம் செலுத்தப்பட்டு கணக்கில் பதியப்பட்டது.

**வேண்டப்படுவது**

1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக்கூற்றும் இலாபநட்ட பகிா்கணக்கும்**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளா் நடைமுறைக் கணக்கு**
3. **31.3.2018 இல் நிதிநிலைமைக்கூற்று**

**வினா இல** 08

ஒரு பங்குடமையில் அம்மி, மம்மி, ஜிம்மி இலாபநட்டங்களை முறையே 2:1:1 என பகிா்வதுடன் முகாமைப் பங்காள்களான அம்மிக்கும் மம்மிக்கும் காலாண்டுச் சம்பளமாக முறையே ரூ 4000, ரூ 3000 வழங்கப்படும். பங்காளா் மூலதனக்கணக்கிற்கு ஆண்டுக்கு 10% வட்டியும் நடைமுறைக் கணக்கு ஆரம்ப மீதிக்கு 20% வட்டியும் வழங்கப்படவேண்டும்.

1/4/2017 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று வருமாறு.

| சொத்து | கிரயம் | தி.தே | தேறியது |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்து** | | | |
| கட்டிடம் | 250000 | 62000 | 188000 |
| மோட்டாா் | 200000 | 58000 | 142000 |
| பொறியந்திரம் | 180000 | 40000 | 140000 |
| | 630000 | 160000 | 470000 |
| நடைமுறைச் சொத்து | | | |
| இருப்பு | | 32000 | |
| கடன்படுநா் | 32000 | | |
| ஐ.ஏற்பாடு | (2000) | 30000 | |
| முற்பன வாடகை | | 1000 | |
| காசு | | 37000 | 100000 |
| | | | **570000** |
| **மூலதன கணக்கு** | | | |
| ஆம்மி | 200000 | | |
| மம்மி | 150000 | | |
| ஜிம்மி | 100000 | 450000 | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| **நடைமுறை க.்கு** | | | |
| ஆம்மி | 17000 | | |
| மம்மி | 13000 | | |
| ஜிம்மி | (10000) | 20000 | **470000** |
| நடைமுறையல்லாக்கடன் | | | |
| மம்மி கடன் | | | **60000** |
| கடன்கொடுநர் | | 38000 | |
| அட்டுறு மின்சாரம் | | 2000 | 40000 |
| | | | **570000** |

**மேலதிக தகவல்கள்**

1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுக் கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.
கடன்பட்டோரிடம் பெற்றது ரூ 378000
கடன்கொடுநருக்கான கொடுப்பனவு ரூ 104000
வாடகை ரூ 8000
மின்சாரம் ரூ 6000
விளம்பரம் ரூ 4000
காப்புறுதி ரூ 7000
கடன்வட்டி மம்மி ரூ 2000
பற்று அம்மி ரூ 5000 மம்மி ரூ 3000 ஜிம்மி ரூ 4000
மோட்டார்கொள்வனவு (1.1.2018) ரூ 40000

3) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
கட்டிடம் 4% மோட்டார் 8% பொறியந்திரம் 10%

5) 31/3/2018 இல் உள்ள மீதிகள்

| | |
|---|---|
| இருப்பு | 40000 |
| அட்டுறு மின்சாரம் | 1000 |
| முற்பன வாடகை | 3000 |
| கடன்படுநர் | 46000 |
| கடன்கொடுநர் | 34000 |

6) கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்டன் ஏற்பாட்டை சிராக்குக.
7) ஜம்மியின் ஆயட்காப்புறுதி ரூ 4000 காப்புறுதிக்கணக்கில் உள்ளடக்கப்பட்டது.
8) உட்திரும்பல் , வெளித்திரும்பல் நாளேட்டின் மொத்தம் முறையே ரூ 5000, ரூ 4000
9) அம்மியால் பங்குடைமைக்காக செலுத்திய ரூ 4000 பிரயானச் செலவு கணக்குகளில் பதியப்படவில்லை.

**வேண்டப்பபடுவது**

1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக்கூற்றும் இலாபநட்ட பகிர்கணக்கும்**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு**
3. **31.3.2018 இல் நிதிநிலைமைக்கூற்று**

## பங்காளர் சேரல்

**வினா இல** 09

ஒரு பங்குடமையில் "அது", "இது" என்போா் இலாபநட்டங்களை 3:2 என பகிரும் பங்காளா்கள். உது 1/4/2017 இல் புதியபங்பாளராக 1/5 பங்குரிதுடன் சேர்க்கப்பட்டர் அவா் தனது இலாபப் பங்கை அது விடம் மட்டுமே பெற்றுக்கொள்கின்றாா். உது மூலதனத்திற்கு ரூ 15000 ஈடுபடுத்தினாா். புதிய உடன்படிக்கைக்கமைய இவா்கள் மூலதனத்திற்கு 10% வட்டியையும் ஒவ்வொருவருக்கும் ஆண்டுச் சம்பளமாக முறையே ரூ 12000, ரூ 8000, ரூ 10000 பெற உரித்துடையவா்கள். இத்தினத்தில் நிறுவன நன்மதிப்பு ரூபா 100000 நன்மதிப்பு சொத்தொன்றாக கருதப்படாது தொடா்பான சீராக்கங்களை மூலதனக் கணக்கில் மேற்கொள்ள.

1.4.2017 இல் மூலதன, நடைமுறைக் கணக்கு மீதிகள் வருமாறு

| | மொத்த உரிமை | நடைமுறைக்கணக்கு |
|---|---|---|
| அது | 220000 | 20000 |
| இது | 165000 | (15000) |

**மேலதிக தகவல்கள்**

1. 31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன் வட்டி தாக்கல் செய்யமுன் பெறப்பட்ட தேறியலாபம் ரூ 162000

2. அது, இது, உது ஆண்டுகாலத்தில் முறையே ரூ 12000, ரூ 10000, ரூ 8000 தொகையை தமது சொந்த தேவைக்காக பற்றினர் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
3. பங்காளர் ஒவ்வொருவரும் தமது ½ ஆண்டுச் சம்பளத்தை காசாக எடுத்திருந்தனர்.

**வேண்டப்படுவது**

1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட பகிர் கணக்கு**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு, மூலதனக் கணக்கு**
3. **31.3.2018 இல் உரிமை மூலதனம்**
4. **31.3.2018 இல் உரிமை மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?**

**வினா இல 10**

பங்குடமையொன்றில் பண்ணும், பரதமும் இலாபநட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள் இவர்களது மூலதனக் கணக்குகளுக்கு ஆண்டுக்கு 10% வட்டியும், ஒவ்வொருவருக்கும் மாதாந்தச் சம்பளமாக முறையே ரூபா 3000, ரூபா 2000 வழங்கப்படல் வேண்டும்.

இப்பங்குடமையில் *1/4/2017* இல் நாட்டியம் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டடார். நாட்டியத்தின் நன்மதிப்பு ரூபா 20000 வாக பெறுமானமிடப்பட்டது புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு மீதி பேனப்படுவதில்லை. நன்மதிப்பு தொடர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கில் மேற்கொள்க. இவருக்கு ஆண்டுச் சம்பளமாக ரூபா 12000 வழங்கப்படல் வேண்டும். புதிய இலாபநட்ட விகிதம் முறையே 5:3:2 ஏனைய ஒப்பந்தங்கள் மாற்றமின்றி தொடர்ந்தனர்.

*31/3/2018* இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கொள்வனவு விற்பனை | 132000 | 374000 |
| உட்திரும்பல் வெளித்திரும்பல் | 4000 | 3000 |
| கடன்படுநர், கடன்கொடுநர் | 53000 | 43000 |
| அறவிடமுடியாக்கடனும் ஐயக்கடன் ஏற்பாடும் | 2000 | 3000 |
| *1/4/2016* இல் இருப்பு | 38000 | |
| உட்காவுகை | 3000 | |
| சம்பளம் | 78000 | |
| மின்சாரம் | 6000 | |
| விளம்பரம் | 5000 | |
| பெற்ற தரகு | | 4000 |
| பொதிகட்டும் பொருள் | 6000 | |
| காப்புறுதி | 5000 | |
| மூலதனக் கணக்கு பண் | | 180000 |
| பரதம் | | 150000 |
| நடைமுறைக் கணக்கு பண் | | 15000 |
| பரதம் | 5000 | |
| பற்றுக் கணக்கு பண் | 7000 | |
| பரதம் | 6000 | |
| நாட்டியம் | 5000 | |
| கட்டிடம் தேய்மான ஏற்பாடும் | 200000 | 54000 |
| மோட்டாரும் தேய்மான ஏற்பாடும் | 180000 | 38000 |
| நாட்டிய மூலதன பங்களிப்பு | | 120000 |
| காசுக்கட்டுப்பாடு | 249000 | |
| | **984000** | **984000** |

**மேலதிக தகவல்கள்**

1. *31/3/2018* இல் உள்ளவாறான இருப்புக்கள் ரூ 46000 ஆகும். இதில் பழுதடைந்த பொருள் ரூபா 6000 உள்ளது இதனை ரூபா 5000 மதிப்பில் எடுக்க தீர்மானிக்கப்பட்டது.
2. காப்புறுதியில் ரூபா 2000 ம், மின்சாரத்தில் ரூபா 1500 ம் தீர்க்கப்படாதுள்ளதுடன் பொதிகட்டும் பொருளில் 1000 பயன்படுத்தப்படாதுள்ளது.
3. நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
   கட்டிடம் 4%     மோட்டார் 8%
4. அறவிடமுடியாக்கடனாக மேலும் ரூபா 1000 பதிவளிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டை எஞ்சிய கடன்பட்டோரில் 10% சீராக்குக

5. *19/11/2017* இல் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் ரூபா 4000 கிரயமான பண்டங்கள் அழிக்கப்பட்டன இவற்றின் கிரயத்தில் 75% காப்புறுதிக் கம்பனி நட்டஈடாக தர முன்வந்தது.
6. *31/12/2017* இல் ரூபா 40000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று பண்டக் கொள்வனவாக பதிவிடப்பட்டுள்ளது.
7. *30/6/2017* இல் பரதம் என்பவர் ரூபா 2000 கிரயமான பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
8. பங்காளர்கள் ஒவ்வொருவரும் தமது சம்பளங்களை காசாக எடுத்திருந்தனர் இவை காசேட்டிலிருந்து சம்பளக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.

**தயாரிக்குக**

1) *31/3/2018* **இல் முடிவுற்ற நிதி வருடத்திற்கான வருமானக்கூற்று (பகிர்வு உட்பட)**

**உ) பங்காளர் நடைமுறைக் கணக்கும் மூலதனக் கணக்கும்**

**3) 31.3.2018 இல் நிதிநிலைமைக்கூற்று**

**வினா இல** 11

பங்குடமையொன்றில் சாள்ஸ், அன்ரனி இலாபநட்டங்களை 5:3 என பகிரும் பங்காளர்கள் இப்பங்குடமையில் *1/4/2017* இல் தீபன் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டடார். இத்தினத்தில் நிறுவன நன்மதிப்பு ரூபா 80000 ஆகும். புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கை ஏற்படுத்தாமல் வேண்டிய சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக மேற்கொள்க. புதிய பங்குடைமை உடன்படிக்கைக்கமைய இவர்களது மூலதனக் கணக்குகளுக்கு ஆண்டுக்கு 10% வட்டியும், ஒவ்வொருவருக்கும் மாதாந்தச் சம்பளமாக முறையே ரூபா 2000, ரூபா 1800 ரூ 1500 வழங்கப்படல் வேண்டும்.

தீபனுக்கு இலபநட்டத்தில் 1/5 பகுதிக்கு உரித்துண்டு. ஏனைய ஒப்பந்தங்கள் மாற்றமின்றி தொடர்ந்தனர்.

*31/3/2018* இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனை | | 420000 |
| விற்பனைக் கிரயம் | 164000 | |
| *31.3.2018* இல் இருப்பு | 32400 | |
| சம்பளம் | 15400 | |
| விற்பனைத் தரகு | 2500 | |
| சுாள்ஸிற்கு செலுத்திய வாடகை | 10500 | |
| விளம்பரம் | 1600 | |
| காப்புறுதி | 4400 | |
| பிரயானம் | 3600 | |
| கழிவுகள் | 1200 | 2000 |
| கடன்படுநர், கடன்கொடுநர் | 50000 | 33200 |
| *1/4/2017* இல் ஐயக்கடன் ஏற்பாடு | | 3800 |
| மூலதனக் கணக்கு சாள்ஸ் | | 240000 |
| அன்ரனி | | 200000 |
| நடைமுறைக் கணக்கு சாள்ஸ் | | 24000 |
| அன்ரனி | 8000 | |
| பற்றுக் கணக்கு சாள்ஸ் | 10800 | |
| அன்ரனி | 9600 | |
| தீபன் | 1200 | |
| தீபன் மூலதனம் | | 180000 |
| கட்டிடம் தேய்மான ஏற்பாடும் | 250000 | 72500 |
| மோட்டாரும் தேய்மான ஏற்பாடும் | 150000 | 55000 |
| பொறியும் தேய்மான ஏற்பாடும் | 100000 | 42800 |
| வங்கிச் செலவு | 1200 | |
| காசு மீதி | 456900 | |
| | **1273300** | **1273300** |

**மேலதிக தகவல்கள்**

1) *31/3/2018* இல் உள்ளவாறான இருப்பில் கிரயத்தில் மதிபிடப்பட்ட ரூபா 4800 பெறுமதியான பழுதடைந்த தொக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன இவற்றிற்கு ரூபா 1200 செலவிடுவதன் மூலம் இவற்றை ரூபா 4000 மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
   கட்டிடம் 2% மோட்டார் 8% பொறி 10%
3) ஐயக்கடன் ஏற்பாடு கடன்பட்டோரில் 2% ஆல் அதிகரிக்க வேண்டும்.
4) *21/5/2017* இல் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் ரூபா 5000 கிரயமான பண்டங்கள் அழிக்கப்பட்டன இவற்றின் கிரயத்தில் 90% காப்புறுதிக் கம்பனி நட்டஈடாக தர முன்வந்தது. இது தொர்பாக பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.
5) *30/9/2017* இல் சாள்ஸ் என்பவர் ரூபா 5000 கிரயமான பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
6) சாள்ஸசின் மகனது பரீட்சைக் கட்டனம் ரூபா 2400 பங்குடமையால் செலுத்தப்பட்டுபங்குடமையின் காப்புறுதிக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.
7) இப்பங்குடைமையின் களஞ்சியசாலை சாளஸ் இனது கட்டிடத்தில் தொழிற்படுகின்றது சாள்ஸிற்கு மாதாந்த கட்டிட வாடகையாக ரூ 1500 செலுத்தப்படவேண்டும்.
8) ஒவ்வொரு பங்காளரும் தமது முதல் இரண்டுமாதச் சம்பளத்தை காசாக எடுத்திருந்தனர் இவை சம்பளக்கணக்கிற்கு வரவிடப்பட்டது.

**தயாரிக்குக**

1) *31/3/2018* **இல் முடிவுற்ற நிதி வருடத்திற்கான வருமானக்கூற்று (பகிர்வு உட்பட)**
**2) பங்காளர் நடைமுறைக் கணக்கும் மூலதனக் கணக்கும்**
**3) 31.3.2018 இல் நிதிநிலைமைக்கூற்று**

**வினா இல** 12

ஒரு பங்குடமையில் அசலும், நகலும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிரும் பங்காளர்கள் இவர்களது மூலதன மீதிகளுக்கு ஆண்டுக்கு 8% வட்டி உரித்துண்டு.

1/4/2017 இல் நிழல் என்பவரை புதிய பங்காளராக சேர்த்துக்கொண்டனர். புதிய ஒப்பந்தத்திற்கமைய நிழலுக்கு ஆண்டுச்சம்பளமாக 12000 வழங்கப்படவேண்டியதுடன் மூலதனத்திற்கு ஆண்டுக்கு 10% வட்டியாக அதிகரிக்கப்பட்டதுடன். நிழலுக்கு இலாபத்தில் 1/5 பகுதி வழங்கப்பட்டதுடன் அசலும் நகலும் இலாபநட்டத்தை சமனாக பங்கிட தீர்மானித்தனர்.

31/3/2018 இல் உள்ளவாறான பரீட்சைமீதி வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கொள்வனவு விற்பனை | 112800 | 394500 |
| உட்திரும்பல் வெளித்திரும்பல் | 2500 | 1800 |
| கடன்பட்டோர் கடன்கொடுநர் | 39600 | 34500 |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 2000 |
| 1/4/2017 இருப்பு | 32900 | |
| கப்பற்கேள்வு | 3600 | |
| செயற்பாட்டுச்செலவு | 58000 | |
| காசுமீதி | 408600 | |
| அசல் கடன்வட்டி | 3000 | |
| ப.மூலதனம் - அசல் | | 150000 |
| - நகல் | | 120000 |
| ப.நடைமுறைக் க/கு 1/4/2017 - அசல் | | 8000 |
| - நகல் | 3000 | |
| ப.பற்று - அசல் | 6000 | |
| - நகல் | 4800 | |
| - நிழல் | 3200 | |
| நிழல் பங்களிப்பு | | 120000 |
| பேற்றகழிவு | | 6000 |
| காணிகட்டிடமும் தே.ஏற்பாடும் | 160000 | 56800 |
| மோட்டார் தே.ஏற்பாடும் | 120000 | 48800 |
| பொறி இயந்திரம் தே.ஏற்பாடும் | 100000 | 32600 |

| | | |
|---|---|---|
| அசல் கடன் | | 80000 |
| | **1055000** | **1055000** |

**மேலதிக தகவல்கள்**

1) 31/3/2018 இல் உள்ளவாறான இருப்பின்பெறுமதி 39200 ஆகும். இதனுள் 4500 பெறுமதியான பழுதடைந்த தொக்கு காணப்படுகின்றது. இது சந்தையில் 2800 பெறுமதியில் விற்கக்கூடியதாகவுள்ளது. எனினும் இதனை விற்பதற்கு எடுத்துச்சென்று தயார்படுத்துவதற்கு 1300 செலவு ஏற்படும்.
2) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
   காணிகட்டிடம் 3% மோட்டார் 6% பொறியந்திரம் 12%
3) அறவிடமுடியாக்கடனாக மேலும் ரூபா1600 பதிவளித்து ஐயக்கடன் ஏற்பாட்டை எஞ்சிய கடன்பட்டோரில் 10% சீராக்குக.
4) நிழல் தனது சம்பளத்தை காசாக எடுத்திருந்தார் இது காசேட்டிலிருந்து செயற்பாட்டுச் செலவுக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.
5) 30/9/2017 இல் நகல் 4000 பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
6) நிழல் நன்மதிப்பின் தனது பங்காக ரூபா 10000 தொகையை ஈடுபடுத்தினார் நன்மதிப்பு தொடர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கில் மேற்கொள்க.
7) எதிர்காலத்தில் பொருள் வழங்குவதாக கடன்பட்டோரிடம் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய கடன்பட்டோரிடம் பெறப்பட்ட ரூ 20000 காசுக் கணக்கில் வரவிடப்பட்டு கடன்பட்டோன் கணக்கிற்கு செலவிடப்பட்டது.
8) நிழழின் ஆயுட் காப்புறுதிக்கு மாதாந்தம் செலுத்திய ரூ 1000 காப்புறுதிக்கட்டனம் பங்குடைமையின் காப்புறுதிக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.
9) இம்பங்குடைமை நகழது கட்டிடத்தில் தொழிற்படுகின்றது நகழுக்கு மாதாந்த கட்டிட வாடகையாக ரூ 2000 வழங்கப்படுகின்றது 1.1.2018 இருந்து புதிய கட்டிடம் வெளியாரிடமிருந்து கிடைத்துள்ளது இதற்கு மாதாந்தம் ரூ 1500 வழங்கப்படவேண்டும் புதிய கட்டிடத்திற்கு ஒரு வருட வாடகை செலுத்தப்பட்டு அவை முழுவதும் செயற்பாட்டுச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் நகழது கட்டிட வாடகை தொடர்பில் இரண்டுமாதவாடகை நிலுவையாகவுள்ளது.

**தயாரிக்குக**

1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்றும் இலாபநட்டபகிர் கணக்கும்.
2) பங்காளர் நடைமுறைக் க/கு 3) பங்காளர் மூலதன க/கு
4) 31/3/2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

**வினா இல** 13

ஒரு பங்குடமையில் ஆதியும், சிவனும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர்வதுடன் முகாமைப் பங்காளரான ஆதிக்கு ஆண்டுச் சம்பளமாக 18000 வழங்கப்படும்.

*1/4/2017* இல் பரமன் என்பவர் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார் புதிய பங்குடமை ஒப்பந்தத்திற்கமைய மூலதனத்திற்கு ஆண்டுக்கு 10% வட்டி, பரமனுக்கு ஆணடுச் சம்பளமாக 12000 வை வழங்குவதுடன் ஆதியினது ஆண்டுச் சம்பளத்தை ரூபா 6000 ஆல் குறைப்பது எனவும் முடிவுசெய்யப்பட்டது. ஆதி தனது 1/5 பங்கு இலாபத்தை பரமனுக்கு வழங்கினார்.

1/4/2017 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று வருமாறு.

| சொத்து | கிரயம் | தி.தே | தேறியது |
|---|---|---|---|
| கட்டிடம் | 120000 | 44000 | 76000 |
| மோட்டார் | 60000 | 21000 | 39000 |
| பொறியந்திரம் | 100000 | 32000 | 68000 |
| நன்மதிப்பு | | | |
| | 260000 | 97000 | 183000 |
| | | | |
| இருப்பு | | 39000 | |
| கடன்படுநர் | 36500 | | |
| ஐ.ஏற்பாடு | (1500) | 35000 | |
| முற்பன வாடகை | | 800 | |
| வங்கி | | 29200 | 114000 |
| | | | **297000** |

| | | | |
|---|---|---|---|
| **மூலதன கணக்கு** | | | |
| ஆதி | | 150000 | |
| சிவன் | | 100000 | 250000 |
| | | | |
| | | | |
| **நடைமுறை கணக்கு** | | | |
| ஆதி | | 17000 | |
| சிவன் | | (7000) | |
| | | | 10000 |
| கடன்கொடுநர் | | 35800 | |
| அட்டுறு மின்சாரம் | | 1200 | 37000 |
| | | | **297000** |

**மேலதிக தகவல்கள்**

1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.
   கடன்பட்டோரிடம் பெற்றது ரூ 322000
   கடன்கொடுநருக்கான கொடுப்பனவு ரூ 144000
   ஆதிக்கு செலுத்திய சம்பளம் ரூ 12000
   வாடகை ரூ 7800
   மின்சாரம் ரூ 6900
   விளம்பரம் ரூ 5600
   காப்புறுதி ரூ 5400
   பற்று ஆதி ரூ 4800 சிவன் ரூ 3600 பரமன் ரூ 4000
   பரமன் ஈடுபடுத்திய காசு ரூ 110000
   மோட்டார்கொள்வனவு 1.1.2018 ரூ 25000
2) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
   கட்டிடம் 6% மோட்டார் 8% பொறியந்திரம் 10%
3) 31/3/2018 இல் உள்ள மீதிகள்

| | |
|---|---|
| இருப்பு | 31500 |
| அட்டுறு மின்சாரம் | 500 |
| முற்பன வாடகை | 600 |
| கடன்படுநர் | 32000 |
| கடன்கொடுநர் | 28000 |

4) கடன்பட்டோர் மீதியில் 5% ஐயக்டன் ஏற்பாட்டை சிராக்குக.
5) பரம்ன் கொண்டுவந்த காசில் அவரது நன்மதிப்பு பங்கு ரூ 20000 உள்ளடங்கியுள்ளது நன்மதிபபு கணக்கு பேனாது மூலதனக்கணக்கில் சீராக்கத்தை மெற்கொள்க.
6) இப் பங்குடைமையில் குறித்த நபர் வாடிக்கையாளராகவும் வழங்குநராகவும் காணப்படுகின்றார் அவரிடமிருந்து வரவேண்டிய ரூ 8000 தொகையானது அவருக்கு செலுத்தவேண்டிய ரூ 6000 தொகைக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டது.
7) இப் பங்குடைமையிலுள்ள பரமன் பங்குடைமைக்காக தனது சொந்தப்பணத்திலிருந்து பங்குடைமைக்கு ரூ 4000 பிரயானச் செலவு செய்தார்.
8) ஆதி மாதாந்தம் ரூ 500 பண்டங்களை சொந்தத்தேவைக்கு பற்றினார்.

**வேண்டப்படுவது :-** 1) 31/3/2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்றும் இலாபநட்ட பகிர்கணக்கு.
2) பங்காளர் நடைமுறைக் கணக்கும், மூலதனக் கணக்கும்
3) 31/3/2018 இல் உள்ளவாறான நிதிதிநிலைமைக்கூற்று

**வினா இல** 14

தேவி சோதி என்போர் பின்வரும் உடன்படிக்கையின் கீழ் பங்குடமையொன்றை நடாத்தி வருகின்றனர்

- மாதாந்தச் சம்பளம் முறையே தேவி, சோதி என்போர் முறையே ரூ 40000, ரூ 20000 செலுத்தப்படுகின்றது.
- மூலதனத்திற்கு மாதாந்த வட்டியாக மீதிக்கு 1.25%
- இலாபநட்டங்கள் தேவி, சோதி ஆகியோருக்கிடையே சமனாக பகிரப்படும்
- பங்குடமையினால் செய்யப்படும் பங்காளர் சொந்தச் செலவுகள் பங்காளர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரதி என்பவர் 1.4.2017 இல் புதிய பங்காளராக சேர்த்துக்கொள்ளப்பட்டார் இவர் சேரும்போது ரூ 1500000 காசாகவும் ரூ 1000000 ஒப்புக்கொண்ட விலையான மோட்டடார் வாகனத்தையும் பங்குடமைக்கு கொண்டுவந்துள்ளார் அதன் பின்னர் எல்லாப் பங்காளர்களும் இலாபநட்டங்களை சமனாக பகிர ஒப்புக்கொண்டனர். 1.4.2017 இல் பங்குடமையின் நன்மதிப்பானது ரூ 1200000 நன்மதிப்பை சொத்தொன்றாக கருதப்படாது. இது தொர்பான சீராக்கங்களை பங்காளர் மூலதனக் கணக்குகளில் செய்யப்பட வேண்டும்.

31.3.2018 இல் உள்ளவாறான காசுப்புத்தக சுருக்கம் வருமாறு

| | | |
|---|---|---|
| | 000 | 000 |
| 1.4.2017 இல் மீதி | | 300 |
| **பெறுவனவுகள்** | | |
| கடன்பட்டோரிம் சேகரிப்பு | 7000 | |
| ரதி மூலதனம் | 1500 | |
| வங்கிக்கடன் | 100 | 8600 |
| | | 8900 |
| **கொடுப்பனவுகள்** | | |
| கடன்கொடுநருக்கான கொடுப்பனவு | 5200 | |
| செலவுகள் | 1200 | |
| உபகரணம் | 600 | |
| சம்பளம் தேவி | 400 | |
| சோதி | 200 | |
| மூலதனவட்டி தேவி | 150 | |
| சோதி | 100 | |
| பற்று – சோதி | 120 | |
| தேவியினால் செய்யப்பட்ட பிரயானச் செலவு மீளளிப்பு | 20 | |
| சோதியின் வீட்டு மிசாரக் கொடுப்பனவு | 40 | |
| தேவி பிள்ளையின் தனியார் வகுப்பு கட்டனம் | 10 | |
| எரிபொருள் மீள்கொடுப்பனவு - தேவி | 25 | |
| - சோதி | 70 | 8135 |
| | | 765 |

**மேலதிக தகவல்கள்**

1.4.2017 இல் மொத்த உரிமையாண்மை மூலதனக் கணக்கு மீதிகள்

| | தேவி 000 | சோதி 000 |
|---|---|---|
| மொத்த உரிமையாண்மை | 3000 | 2800 |
| மூலதனம் | 2200 | 3000 |

2) 31.3.2018 இல் வங்கிக் கடனுக்கு வட்டி ரூ 20000 செலுத்த வேண்டும்

3) வருடத்திற்கான ஆதனம் பொறி உபகரணத் தேய்வு 120000

4) 1.4.2017 இல் உள்ள பொறுப்பு மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் (காசு தவிர)

| | 000 |
|---|---|
| கடன்கொடுநர் | 240 |
| சென்மதிச் செலவு | 20 |
| சரக்கிருப்பு | 210 |
| கடன்பட்டோர் | 340 |
| முற்கொடுப்பனவு | 10 |
| வங்கிக்கடன் | 800 |

5) 31.3.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பொறுப்பு மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் (காசு, சென்மதி வட்டி தவிர்ந்த) என்பவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு அல்லது குறைவு

| | |
|---|---|
| | 000 |
| கடன்கொடுநர் | (40) |
| சென்மதிச் செலவு | 15 |
| சரக்கிருப்பு | (20) |
| கடன்பட்டோர் | 60 |
| முற்கொடுப்பனவு செலவு | 8 |

**வேண்டப்படுவது**
**1) 31.3.2018 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று**
**2) பங்காளரிடையெ இலாபம் நட்டம் பகிரப்படுவதை காட்டும்கூற்று**
**3) பங்காளர் நடைமுறைக் கணக்கு**
**4) 31.3.2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைகூற்று**

**வினா இல** 15

2:1 என இலாபநட்டத்தை பகிரும் நாசார், திவாகர் என்போரது பங்குடமையில் 1.4.2017 இல் சேகர் புதிய பங்குடமையொண்றில் சேர்க்கப்பட்டார் இதனால் நாசார், திவாகர், சேகர் ஆகியோருக்கிடையிலான இலாபநட்ட விகிதம் முறையே 2:1:1 ஆகும். சேகர் தனது மூலதனத்திற்கும் நன்மதிப்புக்கும் குறித்த தொகை காசினை ஈடுபடுத்தினார் இதில் ரூபா 15000 சேகரது நன்மதிப்பு பங்காகும்.

புதிய பங்குடமை உடன்படிக்கையின்படி மூலதனமீதிகளுக்கு ஆண்டுக்கு 10% வட்டியும் ஒவ்வொருபங்காளருக்கும் முறையே காலாண்டுச் சம்பளங்களாக முறையே ரூ 4500, ரூ 3000, ரூ 2500 வழங்கப்படல் வேண்டும். நன்மதிப்பை சொத்தொன்றாக கருதாது பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக சீராக்குக.

**மேலதிக தகவல்கள்**

1)

| | 1.4.2017<br>நடைமுறைக்கணக்கு | 31.3.2018<br>மூலதனக் கணக்கு |
|---|---|---|
| நாசார் | 24000 | 300000 |
| திவாகர் | (6000) | 245000 |
| சேகர் | - | 150000 |

2)

| **1.4..2017** | | **31.3.2018** | |
|---|---|---|---|
| **நடைமுறைச்சொத்து** | | **நடப்பு பரிப்பு** | |
| இருப்பு | 36000 | கடன்கொடுநர் | 42000 |
| கடன்பட்டோர் (தேறியது) | 45000 | அட்டுறு சம்பளம் | 4000 |
| காசு | ? | | |
| முற்பன காப்புறுதி | 2000 | | |

3)

| **31.3.2018** | | **1.4.2017** | |
|---|---|---|---|
| **நடைமுறைச்சொத்து** | | **நடப்பு பரிப்பு** | |
| இருப்பு | 46000 | கடன்கொடுநர் | 38000 |
| கடன்பட்டோர் | 60000 | அட்டுறு சம்பளம் | 2000 |
| முற்பன காப்புறுதி | 2000 | | |

4)

| **பெறுவனவுகள்** | | **கொடுப்பனவுகள்** | |
|---|---|---|---|
| கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 324000 | கடன்கொடுநருக்கு செலுத்தியது | 132000 |
| சேகர் ஈடுபடுத்திய காசு | ? | சம்பளம் | 10300 |
| நாசாரும் திவாகரும் ஈடபடுத்திய காசு ரூ 80000 | | காப்புறுதி | 8700 |
| | | வாடகை | 5300 |
| | | விளம்பரம் | 7200 |
| | | பற்று – திவாகர் | 4200 |
| | | - சேகர் | 2400 |
| | | மோட்டார் கொள்வனவு | 80000 |

5) நடைமுறையல்லாச் சொத்தின் மீதிகள் வருமாறு

| | கிரயம் (1.4.2017) | திரண்டதேய்வு (1.4.2017) |
|---|---|---|
| கட்டிடம் | 240000 | 64500 |

| | | |
|---|---|---|
| மோட்டார் | 120000 | 42500 |
| பொறியந்திரம் | 100000 | 36000 |

6) நடமுறையல்லாச் சொத்துக்கு பின்வருமாறு தேய்விடுக.

| | |
|---|---|
| கட்டிடம் | 2 % |
| மோட்டார் | 8 % |
| பொறி | 10 % |

7) ஒவ்வொரு வருட இறுதிக் கடன்பட்டோர் மீதிகள்மீதும் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்வது இப்பங்குடமையின் வழக்கமாகும்.

8) புதிய மோட்டார் 1.10.2017 இல் நாசாரும் திவாகரும் சமனான தொகையை மூலதனமாக ஈடுபடுத்தி கொள்வனவு செய்யப்பட்டதை குறிக்கும்.

9) காப்புறுதியினுள் திவாகரின் தனிப்பட் ஆயுள் காப்புறுதி ரூ 2600 அடங்கியுள்ளது. பங்குடமையின் பிரயானச் செலவு ரூ 2500 சேகரால் பொறுப்பேற்கப்பட்டது.

**வேண்டப்படுவது**

**1) 30.9.2017 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்றும், பகிர்கணக்கும்**

**2) பங்காளர் நடைமுறைக் கணக்கும் மூலதனக் கணக்கும்**

**3) 30.9.2017 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று**

**வினா இல** 16

ஒரு பங்குடமையில் சாதுவும் சேதுவும் இலாபநட்டங்களை முறையே 60% 40% என பகிர்ந்துகொண்டு பங்காளர்களாக தொழிற்படுகின்றனர் பங்காளர் மூலதன கணக்கு மீதிகளக்கு மாதாந்தம் ½ % வட்டி வழங்கப்படவேண்டும். ஓவ்வொரு பங்காளருக்கும் மாதாந்த சம்பளமாக முறையே ரூ 2500, ரூ 2000, வழங்கப்படவேண்டும். செலவு மீதியுள்ள நடைமுறைக் கணக்குகளிற்கு ஆண்டுக்கு 20% வட்டி வழங்கப்படல்வேண்டும்.

31.3.2018 இல் சூது என்பவர் இலாபநட்டத்தில் 25% பங்குரித்துடன் புதிய பங்காளராக சேர்க்கப்பட்டார் இவர் தனது இலாபப் பங்கை சாதுவிடமிருந்து மட்டும் பெற்றுக்கொள்ளுகின்றார். இத்தினத்தில் நிறுவன நன்மதிப்பு ஆரம்ப மொத்த உரிமை இல் 20% ஆகும் நன்மதிப்பு சொத்தாக கருதப்படாது தொர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக்கினூடாக மேற்கொள்க.

| **1.4.2017 இல்** | **மொத்த உரிமை** | **ப.மூலதனம்** |
|---|---|---|
| சாது | 255000 | 240000 |
| சேது | 145000 | 180000 |

| **1.4.2017 இல் நடைமுறையல்லாச்சொத்து** | **கிரயம்** | **தி.பெ.தே** |
|---|---|---|
| கட்டிடம் | 200000 | 46000 |
| மோட்டார் | 150000 | 42000 |
| பொறி | 120000 | 36000 |

**1.4.2017 இல்**

| **நடைமுறைச்சொத்து** | | **நடைமுறைப்பொறுப்பு** | |
|---|---|---|---|
| இருப்பு | 32000 | கடன்கொடுநர் | 44000 |
| கடன்பட்டோர் | 28000 | அட்டுறு செலவு | 2000 |
| முற்பன செலவு | 1000 | | |
| காசு | ? | | |

31.3.2017 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான காசுக்கொடுக்கல் வாங்கல்

| பெறுவனவு | | கொடுப்பனவு | |
|---|---|---|---|
| கடன்பட்டோரிடம் பெற்றது | 324000 | கடன்கொடுநருக்கு செலுத்தியது | 148000 |
| சூது மூலதனம் | 160000 | செலவுகள் | 17500 |
| | | மூலதனவட்டி | 12600 |
| | | மோட்டார்கொள்வனவு | 25000 |
| | | பற்று | 5000 |
| | | பங்காளர் சம்பளம் | 13500 |

**மேலதிக தகவல்கள்**

1) 31.3.2018 இல் நடைமுறைச்சொத்து நடைமுறைப்பொறுப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு குறைவு வருமாறு

இருப்பு 8000 கடன்கொடுநர் (4000)
கடன்பட்டோர் 6000 முற்பன செலவு 2000
அட்டுறு செலவு (1000)

2) சொத்துக்களக்கு பின்வருமாறு தேய்விடக.
கட்டிடம் 2% மோட்டார் 8% பொறி 10%
3) சேதுவின் கட்டிடத்தில் பங்குடமை தொழிற்படுகின்றது சேதுவுக்கு கடந்த நான்கு மாத வாடகையாக ரூ 4800 செலுத்தப்பட்டுள்ளது.

4) பழைய பங்காளர்கள் தமது இலாபநட்டவீதப்படி பற்றியிருந்தனர்.
5) மூலதனவட்டி ½ ஆண்டுக்குரியது செலுத்தப்பட்டதுடன் பங்காளர்கள் ¼ ஆண்டுச்சம்பளத்தை எடுத்திருந்தனர்
6) சாதுவின் மாதாந்த ஆயுள்காப்புறுதிக்கட்டனம் ரூ300 வீதம் ஒரு வருடத்திற்கு செலுத்தப்பட்ட காப்புறதித் தொகை செலவில் உள்ளடங்கியுள்ளது.

**வேண்டப்படுவது**
**1) 31.3.2017 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்றும், பகிர்கணக்கும்**
**2) பங்காளர் நடைமுறைக் கணக்கும் மூலதனக் கணக்கும்**
**3) 31.3.2017 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்ற**

## பங்காளர் விலகல்

**இல 17**

ரமனி, மதனி, ராகினி என்போர் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் பங்குடைமையை நடாத்துகின்றனர்.

- எல்லாப்பங்காளலுக்கும் ஆரம்ப மூலதனமீதி மீது 10% வட்டி
- இலாபநட்டங்கள் முறையே 5:3:2
- ரமனிக்கும் மதனிக்கும் ஆண்டுச் சம்பளம் முறையே ரூ 240000, ரூ 120000

பங்குடைமையின் 31.3.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபமானது ரூ 4800000 ஆக இருந்தது. எனினும் அதனைத்தொடர்ந்து கணக்கீட்டு பதிவுகளில் பின்வரும் வழுக்கள் வெளிக்கொண்டுவரப்பட்டது.

1. மின்சாரத்திற்கு செலுத்திய ரூ 240000 ஆனது மின்சாரக்கணக்கில் ரூ 420000 ஆக வரவுவைக்கப்பட்டுள்ளது.
2. வங்கிக்கடனுக்கு செலுத்திய வட்டி ரூ 200000 ஆனது வட்டி வருமானக் கணக்கில் ரூ 20000 ஆக செலவு வைக்கப்பட்டுள்ளது.
3. 1..10.2017 இல் ரூ 400000 கொள்வனவுசெய்யப்பட்ட காரியாலய உபகரணம் காரியாலய செலவுக்கணக்கில் ரூ 40000 ஆக பதியப்பட்டுள்ளது. (காரியாலய உபகரணங்களுக்கு வருடாந்தம் 10% தேய்விடப்படும்)
4. மதனியின் ஆயுள்காப்புறுதி செலவினம் ரூ 250000 ஆனது பங்குடைமையினால் செலுத்தப்பட்டதுடன் இது நிறுவன காப்புறுதிச் செவாக பதியப்பட்டது.
5. கடன்பட்டோரிடம் பெற்று வங்கியிலிடப்பட்ட ரூ 400000 காசோலை மறுக்கப்பட்டது இம்மறுத்தல் பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை (கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏறப்பாடு செய்யப்படுகின்றது)

31.3.2018 இல் ராகினி பங்குடைமையிலிருந்து இளைப்பாறினார் இத்திகதியில் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ 2000000 ஆக மதிப்பிடப்பட்டது கணக்குப்புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு சீராக்கப்படுவதில்லை எல்லாச் சீராக்கங்களும் மூலதனக்கணக்கினூடாக சீராக்கப்படல் வேண்டும். ராகினினிக்கு செலுத்தவேண்டிய தொகை பங்குடைமைக்கு கடனாக பராமரிப்பதற்கு இனங்கப்பட்டுள்ளது. ரமனியும் மதனியும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர சம்மதித்தனர்.

1.4.2017 இல் உள்ள பங்காளர் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள்

| | மூலதன கணக்கு 000 | நடைமுறை கணக்கு000 |
|---|---|---|
| ரமனி | 4000 | 800 |
| மதனி | 3000 | 600 |
| ராகினி | 2000 | (200) |

வேண்டப்படுவது
1. வழுக்களை திருத்த நாட்குறிப்பு பதிவுகள்
2. 31.32017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சரியாலாபத்தைக் காட்டும்கூற்று
3. இலாபநட்ட பகிர் கணக்கு
4. 31.3.2017 இல் உள்ளவாறான பங்காளர் மூலதன நடைமுறைக் கணக்குகள்

**வினா இல 18**

ஒரு பங்குடமையில் புத்தன், யேசு, காந்தி என்போர் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என பகிரும் பங்காளர்கள் இவர்களது மூலதன மீதிகளுக்கு ஆண்டுக்கு 10% வட்டி ஆண்டுச் சம்பளங்களாக முறையே 12000, 10000, 8000, உரித்துண்டு.

1/4/2017 இல் யேசு என்பவர் இப்பங்குடமையிலிருந்து இளைப்பாற புத்தனும் காந்தியும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர்ந்து கொண்டு பங்குடமையை தொடர்ந்து நடாத்தினர். ஏனைய ஒப்பந்தங்கள் மாற்றமின்றி தொடர்ந்தன. யேசுவுக்கு செலுத்தப்படவேண்டிய தொகையானது 10% கடன்கணக்கிற்கு மாற்றப்பட்டது.

இத்தினத்தில் நிறுவனத்தின் நன்மதிப்பானது ரூபா 50000 பெறுமதியில் பெறுமானமிடப்படும். புதியபங்காளர்கள் நன்மதிப்பை மூலதனக் கணக்கில் மேற்கொள்ள தீர்மானித்தனர்.

31/3/2018 இல் உள்ளவாறான பரீட்சைமீதி வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கொள்வனவு விற்பனை | 98500 | 255500 |
| உட்திரும்பல் வெளித்திரும்பல் | 2500 | 1500 |
| கடன்பட்டோர் கடன்கொடுநர் | 41200 | 38800 |
| அறவிடமுடியாக்கடன் ஐயக்கடன் ஏற்பாடு | 1800 | 2100 |
| 1/4/2016 இருப்பு | 44400 | |
| ஏற்றும்கூலி | 2600 | |
| காப்புறுதி | 2800 | |
| சம்பளம் | 4800 | |
| விளம்பரம் | 2000 | |
| நேரடி விற்பனைச் செலவு | 2500 | |
| வங்கி அறவீடு | 800 | |
| காசுமீதி | 85500 | |
| ப.மூலதனம் - புத்தன் | | 250000 |
| - யேசு | | 150000 |
| - காந்தி | | 100000 |
| ப.நடைமுறைக் க/கு - புத்தன் | | 18000 |
| - யேசு | 6000 | |
| - காந்தி | | 12000 |
| ப.பற்று - புத்தன் | 12000 | |
| - காந்தி | 8700 | |
| | | |
| யேசுவுக்கு செலுத்தப்பட்ட காசு | 50000 | |
| காணிகட்டிடமும் தே.ஏற்பாடும் | 240000 | 85500 |
| மோட்டார் தே.ஏற்பாடும் | 180000 | 68800 |
| பொறி இயந்திரம் தே.ஏற்பாடும் | 100000 | 35600 |
| வங்கி | 131700 | |
| | **1017800** | **1017800** |

**மேலதிக தகவல்கள்**

1) 31/3/2017 இல் உள்ளவாறான இருப்பு ரூபா 38000 ஆகும்.
2) சொத்துக்கு பின்வருமாறு தேய்விடுக.
   காணிகட்டிடம் 4% மோட்டார் 8% பொறி 10%
3) 19/7/2017 இல் ஏற்பட்ட தீ விபத்தில் 4000 பண்டங்கள் அழிக்கப்பட்டன இவற்றில் காப்புறுதிக் கம்பனி 75% ஐ நட்டஈடாக தரமுன்வந்தது.
4) யேசு இளைப்பாறும் 1.4.2017 இல் போது ரூபா 25000 முன்கொண்டுவரும் தொகையுடைய மோட்டாரை தனது வருமதிகளின் பகுதிக் கொடுப்பனவாக அதே பெறுமதியில் கையேற்றார். இதன் கிரயம் ரூ 40000
6) அறவிடமுடியாக்கடனாக மேலும் ரூபா 1200 பதிவளித்து ஐயக்கடன் ஏற்பாட்டை எஞ்சிய கடன்பட்டோரில் 5% சீராக்குக.

**தயாரிக்குக**

1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்றும், இலாபநட்ட, பகிர்கணக்கு
2) பங்காளர் நடைமுறைக் க/கு 3) பங்காளர் மூலதன க/கு
4) 31/3/2017 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

**வினா இல 19**

ஒரு பங்குடமையில் அறம், கல்வி , வீரம் என்போர் இலாபநட்டங்களை முறையே 2:1:1 என பகிரும் பங்காளர்கள் இவர்களது மூலதன மீதிகளுக்கு ஆண்டுக்கு 15% வட்டி ஆண்டுச் சம்பளங்களாக முறையே 18000, 12000, 6000, உரித்துண்டு.

1.4.2016 இல் அறம் என்பவர் இப்பங்குடமையிலிருந்து இளைப்பாற கல்வியும், வீரமும் இலாபநட்டங்களை சமனாக என முடிவுசெய்தனர் ஏனைய ஒப்பந்தங்கள் மாற்றமின்றி தொடந்தன. அறத்திற்கு செலுத்தப்படவேண்டிய தொகையில் ரூபா 100000 செலுத்தப்பட்டு மிகுதி 10% கடன்கணக்கிற்கு மாற்றப்பட்டது.

இத்தினத்தில் நிறுவனத்தின் நன்மதிப்பானது ரூபா 100000 மதிப்பிடப்பட்டது புதிய பங்காளர்கள் நன்மதிப்பு மிதியை பேனுவதில்லை என முடிவு செய்தனர். மூலதனக்கணக்கில் சீராக்கங்கள் மேற்கொள்ளவில்லை.

*1/4/2017* இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

| சொத்து | தொகை | தொகை |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்து | | |
| கட்டடம் | 240000 | |
| தேய்மான ஏற்பாடு | (72000) | 168000 |
| மோட்டார் | 180000 | |
| தேய்மான ஏற்பாடு | (58000) | 122000 |
| | | |
| நடைமுறைச் செத்து | | |
| இருப்பு | | 36000 |
| கடன்படுநர் | 41200 | |
| ஐயன்கடன் ஏற்பாடு | (3200) | 38000 |
| முற்பனச் செலவு | | 2000 |
| வங்கி மீதி | | 69000 |
| | | **435000** |
| | | |
| மூலதனம் அறம், | 150000 | |
| கல்வி | 120000 | |
| வீரம் | 100000 | 370000 |
| | | |
| | | |
| | | |
| நடைமுறைக்கணக்கு அறம், | 12000 | |
| கல்வி | (5000) | |
| வீரம் | 8000 | 15000 |
| கடன்கொடுநர் | | 48000 |
| சென்மதி செலவு | | 2000 |
| | | |
| | | **435000** |

**மேலதிக தகவல்கள்**

1) *31/3/2018* இல் உள்ளவாறான மீதிகள் வருமாறு
   கடன்படுநர் ரூபா 47000 கடன் கொடுநர் ரூபா 42000
   சென்மதி செலவு ரூபா 3000 முற்பனச் செலவு ரூபா 1000
   இருப்பு ரூ 40000

2) கடன்பட்டோர் மீதியல் 10% ஐயக்கடன் ஏற்பாட்டை சீராக்குக.

3) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடப்படுகின்றது.

கட்டடம் 6%　　　மோட்டார் 12%

4) *31/3/2018* இல் முடிவுற்ற நிதி வருடத்திற்காகான காசுக் கொடுக்கல் வாங்கல் வருமாறு.
கடன் பட்டோரிடம் சேகரிக்கப்பட்டது. ரூபா 344200
கடன் கொடுநருக்கு செலுத்தப்பட்டது. ?
செலவு செலவு 6000
பங்காளர் பற்று கல்வி 3600
வீரம் 2400
அறத்திற்கு செலுத்தியது ரூபா 100000
பங்காளர் சம்பளம் ரூபா 18000
5) *31/3/2014* இல் ரூபா 50000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றை அறம் இளைப்பாறும் போது அத்தினத்திலுள்ள முன்கொண்டுவரும் தொகையில் எடுத்துக் கொண்டார்.
6) *31/12/2017* இல் வீரம் ரூபா 4000 கிரயமான பண்டங்களை சொந்த தேவைக்காக பற்றினார்
7) *30/9/2017* இல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டாருக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 30000
8) விற்பனையில் 40% மொத்தலாப எல்லையில் நிறுவனம் தொழிற்படுகிறது.

**தயாரிக்குக.**
1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று, இலாபநட்ட, பகிர்கணக்கு
2) பங்காளர் நடைமுறைக் க/கு　3) பங்காளர் மூலதன க/கு
5) 31/3/2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

**வினா இல 20**
ஒரு பங்குடமையில் ரதி,மதி, சோதி என்போர் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என பகிரும் பங்காளர்கள் இப்பங்குடமையின் ஏடுகளில் 1.4.2017 இல் உள்ள ஐந்தொகை வருமாறு

| **நடைமுறையல்லாச் சொத்து** | |
|---|---|
| ஆதனம்பொறி உபகரணம் | 240000 |
| **நடைமுறைச்சொத்து** | |
| இறுதி இருப்பு | 35000 |
| கடன்பட்டோர் | 45000 |
| வங்கி | 212000 |
| | **532000** |
| பங்காளர் மூலதனம் - ரதி | 180000 |
| - மதி | 120000 |
| - சோதி | 100000 |
| பங்காளர் நடைமுறைக்கணக்கு - ரதி | 18000 |
| - மதி | 15000 |
| - சோதி | (3000) |
| கடன்கொடுநர் | 50000 |
| ஆதனம்பொறி உபகரணம் தேய்மான ஏற்பாடு | 52000 |
| | **532000** |

இப் பங்குடமையிலிருந்து 1.4.2017 இல் மதி இளைப்பாற ரதியும் சோதியும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர்ந்துகொண்டு பங்குடமையை தொடர்ந்தனர் பங்காளர் மூலதனக் கணக்குகள் மீது 10% வட்டியும், பங்காளர் செலவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கிற்கு 20% வட்டியும் விதிக்கப்படும். ஓவ்வொரு பங்காளருக்கும் மாதாந்தச் சம்பளமாக முறையே 2500, 2000 வழங்கப்படல் வேண்டும். இத்தினத்தில் நிறுவன நன்மதிப்பு ஆரம்ப மூலதன மீதியின் 10% ஆகும் நன்மதிப்பு கணக்கு எற்படத்தாது தொர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்குக.
31.3.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு
கடன்பட்டோரிடம் சேகரிப்பு 342000
கடன்கொடுநருக்கு செலுத்தியது 146000
பங்காளர் மொத்தச் சம்பளம் 54000
செலவுகள் 24000
பற்று – ரதி 4000
- சோதி 3000

மேலதிக தகவல்கள்

1) 31.3.2018 இல் இருப்பு , கடன்பட்டோா் மீதிகள் முறையே 8000 12000 தொகையால் அதிகரித்ததுடன் கடன்கொடுநா் ரூபா 10000 தொகையால் குறைவடைந்துள்ளது.
2) 1.4.2017 இல் ரூபா 37000 முன்கொண்டுவரும் தொகையையும், ரூபா 23000 திரண்டதேய்வுடையதுமான மோட்டாா் வாகனத்தை அதன் முன்கொண்டுவரும் தொகையில் மதி கையேற்றாா்.
3) ஆதனம் பொறி உபகரணங்களுக்கு ஆண்டுக்கு 10% தேய்விடப்படும்.
4) மதி இளைப்பாறும்போது அவருக்கு செலுத்த வேண்டிய தொகையில் 50% செலுத்தப்பட்டு மிகுதி கடன்கணக்கிற்கு மாற்றப்பட்டது.
5) ஒவ்வொரு ஆண்டு இறுதி கடன்பட்டோா் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்வது வழக்கம்
6) ரதியின் சொந்த வீட்டுவாடகை ரூ 6000 பங்குடைமையால் செலுத்தப்பட்டு பங்குடைமையின் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**தயாரிக்குக.**

1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று, இலாபநட்ட, பகிா்கணக்கு
2) பங்காளா் நடைமுறைக் க/கு 3) பங்காளா் மூலதன க/கு
3) 31/3/2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைகூற்று

**வினா இல 21**

ஒரு பங்குடமையில் மாயோனும், சேயோனும் சயந்தனும் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என பகிரும் பங்காளா்கள். இவா்களது மூலதன கணக்கின் மீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டிக்கு உரித்துண்டு.

1/4/2017 இல் மாயோன் இளைப்பாற சயந்தன் சேயோனும் இலாபநட்டங்களை 3:2 என பகிா்வது என முடிவு செய்தனா். புதிய ஒப்பந்தப்படி சயந்தனுக்கு ஆண்டுச் சம்பளமாக 24000 வழங்கப்படவேண்டியதுடன் இத்தினத்தில் மாயோன் நன்மதிப்பு ரூபா 50000 ஆக பெறுமானமிடப்பட்டது. நன்மதிப்பு சீராக்கத்தை பங்காளா் மூலதன கணக்கில் மேற்கொள்க .

1) இப்பங்குடமையின் புத்தகங்களில் 1/4/2017 இல் உள்ளவாறான மீதிகள் வருமாறு

| | மூலதன கணக்கு | நடைமுறைக் கணக்கு |
|---|---|---|
| மாயோன் | 200000 | 8000 செலவு |
| சேயோன் | 150000 | 3000 வரவு |
| சுயந்தன் | 120000 | 10000 செலவு |

| | | |
|---|---|---|
| இருப்பு | | 32000 |
| கடன்கொடுநா் | 42000 | |
| காணிகட்டிடம் | (பு.பெ) | 120000 |
| மோட்டாா் | (பு.பெ) | 180000 |
| காசும் | ? | |
| கடன்பட்டோா் | | 40000 |
| ஐயக்கடன் ஏற்பாடு | | (2000) |

2) மாயோன் 25000 திரண்டதேய்வையும் ரூ 35000 முன்கொண்டுவரும் தொகையையும் மோட்டாரை அத்தினத்திலுள்ள முன்கொண்டுவரும் பெறுமதியில் கையேற்றாா். இவருக்கு செலுத்த வேண்டிய மிகுதி 10% கடன்கணக்கிற்கு மாற்றப்படும்.

4) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
காணிகட்டிடம் 5% மோட்டாா் 10%
5) கடன்பட்டோரில் ஐயக்கடன் ஏற்பாட்டை 5% சீராக்குக.

6) 31/3/2017 முடிவடைந்த ஆண்டுக்கான காசுக் கொடுக்கல் வாங்கல்கள்.
சுயந்தன் சம்பளம் 24000
செலவுகள் 38000
பெற்ற வாடகை 2800
மாயோனுக்கு செலுத்திய காசு 30000
கடன்பட்டோரிடம் பெற்றது ரூ 324000
கடன்கொடுநருக்கு செலுத்தியது ரூ 112000
பற்று சேயோன் 6000

சயந்தன் 2400

7) 31/3/2018 இல் உள்ளவாறான மீதிகள்

கடன்பட்டோர் 44000 கடன்கொடுநர் 32000 இருப்பு 36000

**தயாரிக்கக**

1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று, இலாபநட்ட, பகிர்கணக்கு

2) பங்காளர் நடைமுறைக் க/கு 3) பங்காளர் மூலதன க/கு

5) 31/3/2018 இல் உள்ளவாறான நிதிநலைமைக்கூற்று

**வினா இல 22**

ஒரு பங்குடமையில் மதியும், விதியும், சதியும் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என பகிர்வதுடன் மூலதனத்திற்கு ஆண்டுக்கு 12% வட்டி, முகாமைப் பங்காளரான மதிக்கு ஆண்டுச் சம்பளமாக 24000 வழங்கப்படும். *31/3/2018* இல் மதி இளைப்பாற புதிய பங்குடமை ஒப்பந்தத்திற்கமைய பங்குடமையின் புதியலாபநட்ட வீதம் விதி, சதி, ஆகியோருக்கிடையே 3:2 ஆகும் இத்தினத்தில் மதியின் நன்மதிப்பு 25000 ரூபாவாக மதிப்பிடப்பட்டதுடன் புத்தகங்களில் நன்மதிப்பை மூலதனக் கணக்கில் சீராக்குவது என முடிவுசெய்யப்பட்டது.

1/4/2017 **இல் உள்ளவாறான ஐந்தொகை வரமாறு.**

| பொறுப்பு | தொகை | தொகை | சொத்து | கிரயம் | தி.தே | தேறியது |
|---|---|---|---|---|---|---|
| **மூலதன கணக்கு** | | | கட்டிடம் | 200000 | 44000 | 156000 |
| மதி | 250000 | | மோட்டார் | 60000 | 28000 | 32000 |
| விதி | 150000 | | பொறியந்திரம் | 180000 | 52000 | 128000 |
| சதி | 100000 | | | | | |
| | | 500000 | | 420000 | 124000 | 316000 |
| **நடைமுறை க.்கு** | | | இருப்பு | | 42000 | |
| மதி | 8000 | | கடன்படுநர் | 34100 | | |
| விதி | (3000) | | ஐ.ஏற்பாடு | (2100) | 32000 | |
| சதி | 5000 | 10000 | வங்கி | | 155000 | 229000 |
| கடன்கொடுநர் | 33200 | | | | | |
| அட்டுறு மின்சாரம் | 1800 | 35000 | | | | |
| | | **545000** | | | | **545000** |

**மேலதிக தகவல்கள்**

1) *31/3/2018* முடிவடைந்த ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

கடன்பட்டோரிடம் பெற்ற காசு ?

கடன்கொடுநருக்கு செலுத்திய காசு 106000

மின்சாரம் 4200

விளம்பரம் 1800

பிரயானம் 2400

சம்பளம் 27000

நானவிதசெலவு 1100

விற்பனைத் தரகு 2000

பற்றுக்கள் மதி 6400 விதி 4800 சதி 6000

2) ஆண்டு காலத்தில் கடன்பட்டேரில் 2100 அறவிடமுடியாக் கடனாகபதிவழிக்கப்பட்டது. இறுதிக் கடன்பட்டோரில் ஐயக்கடன் ஏற்பாட்டை 5% சீராக்குக

1) மதி தமது சம்பளங்களை காசாக எடுத்திருந்தனர் இவை சம்பளக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.

2) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடப்பட்டது.

கட்டிடம் 2%

மோட்டார் 8%

பொறியந்திரம் 10%

3) மதி இளைப்பாறும் போது மோட்டார் வாகனத்தை இத்தினத்திலுள்ள முன்கொண்டுவரும் தொகையில் கையேற்றார். இதன் கிரயம் 32000 தேய்மான ஏற்பாடு ரூ 28000

4) நிறுவனம் கிரயத்தில் 50% இலாபம் உழைக்கின்றது.

5) 31/3/2018 இல் உள்ளவாறான மீதிகள் வருமாறு
இருப்பு 38000 கடன்பட்டோர் 58000 கடன்கொடுநர் 37500 அட்டுறு மின்சாரம் 600 முற்பன பிரயானம் 900 ஆகும்

6) மதிக்கு செலுத்தப்பட வேணடிய மிகுதித்தொகையானது காசாக செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது :-** 1) 31/3/2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார இலாபநட்ட பகிர்கணக்கு.
2) பங்காளர் நடைமுறைக் கணக்கும், மூலதனக் கணக்கும்
3) 31/3/2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

## கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்
## ( 2006- 2018 )

**வினா இல 23**
*2018 August*

அமலன,விமலன்,கமலன் ஆகியோரின் பங்குடைமை உற்பத்தி வியாபாரமொன்றில் ஈடுபடுகின்றது பின்வரும் தகவல்கள் 31.3.2017 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

| | ரூபா 000 |
|---|---|
| **சரக்கிருப்பு** | |
| மூலப்பொருள் ……………………………. | 600 |
| நடைமுறை வேலை …………………… | 800 |
| முடிவுப்பொருள் …………………………… | 1200 |
| **மூலதனக் கணக்கு** | |
| அமலன் ………………………………… | 10000 |
| விமலன் ………………………………… | 6000 |
| கமலன் ………………………………… | 4000 |
| **நடைமுறைக் கணக்கு** | |
| அமலன் ………………………………… | 1200 |
| விமலன் ………………………………… | 1000 |
| கமலன் ………………………………… | 600 |
| கடன் கணக்கு – அமலன் ……………… | 4000 |

மேலதிக தகவல்கள்
1) பங்குடைமை ஒப்பந்தம் வருமாறு
   - அமலன், விமலன், கமலன் ஆகியோர் முறையே 5:3:2 என இலாபநட்டங்களை பகிர்கின்றனர்.
   - பங்ளாளர் ஆரம்ப மூலதன மீதிக்கு வருடம் 10% வட்டி
   - பங்காளர் கடனுக்கு வருடம் 12% வட்டி

2) 31.3.2018 முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் வருமாறு

| | 000 |
|---|---|
| மூலப்பொருட்கள் கொள்வனவு …………………….. | 1400 |
| நேர் கூலிகள் ……………………………………… | 700 |
| நிர்வாக நிநியோகச் செலவு ……………………… | 2350 |
| நிதிச் செலவுகள் ……………………………… | 350 |
| விற்பனைகள் ………………………………….. | 9700 |
| உற்பத்தி மேந்தலை …………………………………… | 300 |

3) 31.3.2018 இல் உள்ளவாறான சரக்கிருப்புக்கள் 000

| | |
|---|---|
| மூலப்பொருள்……………………………………….. | 1000 |
| நடைபெறும் வேலை …………………………….. | 600 |
| முடிவுப்பொருள் …………………………………. | 1500 |

4) ஆமலின் கடனிற்கு இதுவரை வட்டி எதுவும் செலுத்தப்படவும் இல்லை பதிவுகள் எவையும் செய்யப்படவுமில்லை.
5) தொழிற்சாலை முகாமையாளராக பணியாற்றியமைக்காக கமலனுக்கு மாதாந்தச் சம்பளம் ரூ 10000 செலுத்தப்படுகின்றது. 10 மாதங்களுக்குரிய சம்ளம் செலுத்தப்பட்டு உற்பத்தி மேந்தலையில் உள்ளடக்கப்படவில்லை. மிகுதி மாதங்களுக்கான சம்பளமானது செலுத்தப்படவோ கணக்கிலிடப்படவோ இல்லை.
6) நடைமுறை வருடத்திற்கான பெறுமானத்தேய்வு ரூ 1400 000 ஆனது நிர்வாக விநியோகச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இத்தொகையானது தொழிற்சாலைக்கும் நிர்வாக காரியாலயத்திற்கும் இடையே சமனாக பகிரப்படும்.
7) விமலன் சுகவீனம் காரணமாக 31.3.2018 இல் பங்குடைமையிலிருந்து இளைப்பாறினார் இத்தினத்தில் அவரின் நன்மதிப்பு பங்கு ரூ 2100 000 அவருக்கு செலுத்தப்படவேண்டிய தொகையில் ரூ 3000 000 இளைப்பாறும் வேலையில் மருத்துவச் சிகிச்சைக்காக செலுத்தப்பட்டுள்ளது. மிகுதித் தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது. புதிய இலாபநட்ட விகிதம் 5:2 பங்குடைமையை தொடர்வது என தீர்மானிக்கப்பட்டது.

**வேண்டப்படுவது**
1. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக் கூற்றும் பகிர் கணக்கும்**
2. **31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் மூலதனக் கணக்கு, நடைமுறைக் கணக்கு**
3. **விமலன் கடன் கணக்கு**

**வினா இல 23**

***2017 August***

அமலினி, கமலினி, நிமலினி என்போர் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் பங்குடைமையை நடாத்துகின்றனர்.

- எல்லாப்பங்காளலுக்கும் ஆரம்ப மூலதனமீதி மீது 10% வட்டி
- இலாபநட்டங்கள் முறையே 3:2:1

புங்குடைமையின் 31.3.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபமானது ரூ 3400000 ஆக இருந்தது. எனினும் அதனைத்தொடர்ந்து கணக்கீட்டு பதிவுகளில் பின்வரும் வழுக்கள் வெளிக்கொண்டுவரப்பட்டது.

6. ஊழியருக்கான சம்பளம் ரூ 360000 ஆனது சம்பளக்கணக்கில் ரூ 630000 ஆக வரவுவைக்கப்பட்டுள்ளது.
7. வுங்கிக்கடனுக்கு செலுத்திய வட்டி ரூ 100000 ஆனது வட்டி வருமானக் கணக்கில் ரூ 10000 ஆக செலவு வைக்கப்பட்டுள்ளது.
8. 1..4.2016 இல் ரூ 300000 அகாள்வனவுசெய்யப்பட்ட காரியாலய உபகரணம் காரியாலய செலவாக பதியப்பட்டுள்ளது. (காரியாலய உபகரணங்களுக்கு வருடாந்தம் 10% தேய்விடப்படும்)
9. அமலினியின் ஆயுள்காப்புறுதி செலவினம் ரூ 150000 ஆனது பங்குடைமையினால் செலுத்தப்பட்டதுடன் இது நிறுவன காப்புறுதிச் செவாக பதியப்பட்டது.

31.3.2017 இல் அமலினி பங்குடைமையிலிருந்து இளைப்பாறினார் இத்திகதியில் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ 1800000 ஆக மதிப்பிடப்பட்டது கணக்குப்புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு சீராக்கப்படுவதில்லை எல்லாச் சீராக்கங்களும் மூலதனக்கணக்கினூடாக சீராக்கப்படல் வேண்டும். அமலினிக்கு செலுத்தவேண்டிய தொகை பங்குடைமைக்கு கடனாக பராமரிப்பதற்கு அனங்கப்பட்டுள்ளது. கமலினியும், நிமலினியும் இலாபநட்டங்களை முறையே 2:1 என பகிர சம்மதித்தனர்.

1.4.2016 இல் உள்ள பங்காளர் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள்

| | மூலதன கணக்கு 000 | நடைமுறை கணக்கு000 |
|---|---|---|
| அமலினி | 4200 | 800 |
| கமலினி | 3000 | 500 |
| நிமலினி | 2000 | 300 |

வேண்டப்படுவது

5. வழுக்களை திருத்த நாட்குறிப்பு பதிவுகள்
6. 31.32017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சரியாலாபத்தைக் காட்டும்கூற்று
7. 31.3.2017 இல் உள்ளவாறான பங்காளர் மூலதன நடைமுறைக் கணக்குகள்

**வினா இல 24**
*2016 August*

இலாபநட்டங்களை சமனாக பகிரும் ரங்கா , இரத்தி ஆகியோர் ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனமொன்றின் பங்காளர்கள் 1.4.2015 இல் உதயன் பங்காளராக சேர்க்கப்பட்டார் திருத்தியமைக்கப்பட்ட பங்குடமை ஒப்பந்தம் வருமாறு

- இலபநட்டங்கள் ரங்கா இரத்தி உதயன் ஆகியோருக்கிடையில் 2:2:1
- நன்மதிப்பு கணக்கு பேனாது தொடர்பான சீராக்கங்களை மூலதன கணக்கில் மேற்கொள்ளக.
- பங்காளர் வருடமுடிவிலுள்ள மூலதன மீதிக்கு வருடாந்தம் 10% வட்டி
- இரத்தி உதயன் ஒவ்வொருவருக்கும் மாதச் சம்பளம் ரூ 40000 பெற உரித்துடையவர்கள்
- பங்காளர்களினால் வழங்கப்படும் கடன்களுக்கு 8% வட்டி

31.3.2016 இல் பரீட்சை மிதி வருமாறு

| விபரம் | 000 வரவு | 000 செலவு |
|---|---|---|
| ஆலோசன வழங்கல் வருமானம் | | 8600 |
| ஆலோசனை வழங்கல் செலவு | 3500 | |
| செயற்பாட்டுச்செலவு | 1200 | |
| இரத்திக்கு செலுத்திய சம்பளம் | 480 | |
| 1.1.2016 இல் உதயனால் வழங்கப்பட்ட கடன் | | 2000 |
| உதயனுக்கு செலுத்திய கடன்வட்டி | 30 | |
| 31.3.2016 ஆதணம் பொறி உபகரணத்தின் முன் கொண்டு வரும் தொகை | 6000 | |
| ஆதணம் பொறி உபகரணத்தின் பெறுமானத் தேய்வு | 1800 | |
| ஏனைய வருமானம் | | 100 |
| வங்கியிலுள்ள காசு | 290 | |
| 1.4.2015 மூலதன கணக்கு ரங்கா | | 1000 |
| இரத்தி | | 1000 |
| 1.4.2015 நடைமுறைக் கணக்கு ரங்கா | | 200 |
| இரத்தி | | 100 |
| ஊதயனால் கொண்டுவரப்பட்ட காசு | | 300 |
| | 13300 | 13300 |

**மேலதிக தகவல்கள்**

1. உதயன் பின்வருவனவற்றை மூலதனமாக கொண்டுவந்தார்

| | 000 |
|---|---|
| அலுவலக உபகரணம் | 700 |
| காசு | 300 |

   எனினும் காசு மாத்திரம் புத்தகங்களில் பதியப்பட்டது
2. உதயனை சேர்க்கும்போது நிறுவன நன்மதிப்பு ரூ 1800 000
3. ஆதணம் பொறி உபகரத்திற்கு 10மூ கிரயத்தில் தேய்விடுக.
4. 1.1.2016 பங்குடமையானது வாடிக்கையாளா ஒருவருக்கு ஆலோசனைச் சேவையை மாதாந்தம் ரூ 100000 கட்டனத்தில் வழங்குவதற்கான உடன்படிக்கையை செய்தது. இத்தினத்தில் இவ் வாடிக்கையாளர் ரூ 500000 தொகையை செலுத்தினார் இத்தொகை ஆலோசனை வழங்கல் வருமானமாக பதியப்பட்டுள்ளது.
5. 31.3.2016 வங்கிக்கணக்கு மீதியும் வங்கிக்கூற்று மீதியும் உடன்படவிவ்லைகாரணங்கள்
   - வங்கியில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட ஆலோசனை சேவை வருமானம் ரூ 300000 கணக்குப்புத்தகங்களில் பதியப்படவில்லை.
   - ரங்காவின் மனைவியிடம் ஆலோசனை வழங்கல் சேவைக்காக பெறப்பட்ட ரூ 50000 காசோலை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டும் இன்னும் வசூழிக்கப்படவில்லை. அது ஏனைய வருமானமாக பதியப்பட்டது.
   - வெளிவாரி ஆலோசனை வழங்குநர்களக்கு வழங்கப்பட்ட ரூ 250000 காசோலை கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
   - நிலையான கட்டளையின்படி இரத்தியின் வீட்டுக்கடனுக்கான தவனைக்கட்டனம் ரூ 50000 கணக்குப் புத்தகங்களில் பதியப்படவில்லை.

***வேண்டப்படுவது***
***ஆ) 31.3.2016 முடிவுற்ற நிதியாண்டுக்கான பகிர் கணக்கு உட்பட வருமானக்கூற்று***
***ஆ) 31.3.2016 இல் முடிவுற்ற நிதியாண்டுக்கான நடைமுறைக் கணக்கு மூலதனக் கணக்கு***
***இ) 31.3.2016 இல் சீராக்கி வங்கி மீதி வங்கிக்கணக்கிணக்க கூற்று***

**வினா இல 25**

***2015 August***
அஜித், மஜித் ஆகியோா் 1.4.2014 இல் பங்குடமையொன்றை ஆரம்பித்தனா் பங்குடமை ஒப்பந்ம் வருமாறு

- இலாபநட்டங்கள் அஜித் மஜித் ஆகியோருக்கிடையில் 2:1
- பங்காளா் மூலதனத்திற்கு வருடாந்தம் 10% வட்டி
- பங்காளா்களினால் வழங்கப்படும் கடன்களுக்கு 6% வட்டி
- பங்காளா்உடன் தொடா்பான எல்லாக் கொடுக்கல் வாங்களும் அவ்கள் வடைமுறைக் கணக்கில் பதியப்படும்.

31.3.2015 இல் பரீட்சை மிதி வருமாறு

| விபரம் | வரவு 000 | செலவு 000 |
|---|---|---|
| ஆதணம் பொறி உபகரணம் கொண்டு செல் பெறுமதியில் | 4800 | |
| ஆதணம் பொறின் பெறுமானத் தேய்வு | 600 | |
| வியாபார வருமதி | 900 | |
| வுங்கியிலுள்ள காசு | 130 | |
| மூலதனம் அஜித் | | 1800 |
| மஜித் | | 1300 |
| 1.8.2014 அஜித்தினால் வழங்கப்பட்ட கடன் | | 1000 |
| வியாபாரக் கொடுக்குமதி | | 340 |
| விற்பனை | | 6100 |
| கொள்வனவு | 2500 | |
| செயற்பாட்டுச் செலவு | 820 | |
| அஜித்திற்கு செலுத்திய சம்பளம் | 200 | |
| அஜித்தின் கடனுக்கு செலுத்திய வட்டி | 30 | |
| மஜித்திற்கு செலுத்திய மூலதனவட்டி | 100 | |
| அஜித்திற்கு செலுத்திய வாடகை | 100 | |
| புதிய அலுவலக இடத்திற்கு செலுத்திய வாடகை | 360 | |
| | **10540** | **10540** |

**மேலதிக தகவல்கள்**

1) இவ் வியாபாரமானது அஜித்திற்கு சொந்தமான கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடா்பி அஜித்திற்கு வருடாந்த வாடகைாக ரூ 240000 செலுத்த வேண்டும் எனினும் 1.10.2014 இல் இவ் வியாபாரமானது ரூ 360000 வருடாந்த வாடகை வாடகையுடன் புதிய இடமொன்றிற்கு இடமாற்றப்பட்டது. இத்திகதியில் இம் முழு வாடகைத் தொகையும் செலுத்தப்பட்டது.
2) சுரக்கிருப்பு பதிவேடுகளின்படி 31.3.2015 இல் சரக்கிருப்பின் கிரயம் ரூ 250000 எனினும் முறையே அஜித் மஜித் ஆகியோரால் பெறப்பட்ட ரூ 30000 ரூ 20000 பொருட்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்படவில்லை.
3) 2015 ஏப்பிரல் மாதத்தில் விநியோகம் செய்வதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களுக்காக வியாபாரத்தினால் பெறப்பட்ட முற்பணம் ரூ 100000 நடைமுறையாண்டின் விற்பனை என பதியப்பட்டுள்ளது.
4) புங்குடமையின் எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கிக் கணக்கினுடாகவே மேற்கொள்ளப்படுகின்றன 31.3.2015 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கின் மீதியும் வங்கிக்கூற்று மீதியும் ஒத்திருக்கவில்லை காரணங்கள் வருமாறு.
    - வாடிக்கையாளா் ஒருவரால் வங்கியில் ரூ 40000 காசோலையொன்று நேரடியாக வைப்புச் செய்யப்பட்டது.
    - வாடிக்கையாளா் ஒருவரிடம் பெறப்பட்ட ரூ 60000 காசோலையொன்று மறுக்கப்பட்டது.
    - வழங்குநருக்கு வழங்கப்பட்ட ரூ 50000 காசோலை கொடுப்பனவுக்கு சமா்ப்பிக்கப்படவில்லை.
    - அஜித்தின் ஆயுள் காப்புறுதிக்கு செலுத்தப்பட்ட ரூ 10000 காசோலையொன்று வியாபாரத்தின் வங்கிக் கணக்கில் பதியப்படவில்லை.

***வேண்டப்படுவது***
***ஆ) 31.3.2015 முடிவுற்ற நிதியாண்டுக்கான பகிர் கணக்கு உட்பட வருமானக்கூற்று***

***ஆ) 31.3.2015 இல் முடிவுற்ற நிதியாண்டுக்கான நடைமுறைக் கணக்கு***
***இ) 31.3.2015 இல் வங்கியிலுள்ள காசு வியாபார வருமதி***

**வினா இல 26**
*2014 August (New)*

31.3.2013 இல் நகுலேஸ் விஸ்வா சந்துரு என்போரது பங்கடமையின் சுருக்கிய நிதிநிலைமைக்கூற்று

| **சொத்து** | **ரூபா 000** |
|---|---|
| கொண்டுசெல்லும்டிபறமதியுடைய ஆதனம்பொறி உபகரணம் | 6000 |
| சரக்கிருப்பு | 1000 |
| வியாபாரகடன்பட்டோர் | 1500 |
| வங்கியிலுள்காசு | 500 |
| | **9000** |
| **உரிமையம் பொறுப்பும்** | |
| மூலதனக்கணக்கு –நகுலேஸ் | 3000 |
| விஸ்வா | 3000 |
| சந்துரு | 2000 |
| நடைமுறைக்கணக்கு- நகுலேஸ் | 350 |
| விஸ்வா | 330 |
| சந்துரு | 80 |
| கடன்கொடுநர் | 240 |
| | **9000** |

***மேலதிக தகவல்கள்***

1) நகுலேஸ் விஸ்வா சந்துரு என்போரது பங்கடமையின் உடன்படிக்கை பின்வருமாறு.

- இலாபநட்டவிகிதம் நகுலேஸ் விஸ்வா சந்துரு ஆகியோருக்கு முறையே 3:2:1
- ஓவ்வொர பங்காளருக்கும் மாதச்சம்பளம் ரூ 10000 பெறஉரித்துடையவர்கள்
- பங்காளர்கள் தங்கள் மூலதனக்கணக்கு ஆரம்பமீதிகளுக்கு 5% வட்டி பெறஉரித்துடையவர்கள்.

2) 1.4.2013 இல் நகுலெஸ் இளைப்பாறினார் இவருக்கு செலுத்தவேண்டிய தொகை கடனாக கருதவதற்கும் 10% வட்டி செலுத்துவதற்கம் உடன்பட்டது. நடைமுறையாண்டிற்கான வட்டி செலத்தப்படல் வேண்டும்.

3) 1.4.2013 இல் பங்கடமையின் நன்மதிப்பானது ரூ 900000 மதிப்பிடப்பட்டதுடன் நன்மதிப்பானது பங்குடமையின் ஐந்தொகையில் சொத்தொன்றாக கருதப்படுவதில்லை. நன்மதிப் தொடர்பான எல்லாச் சீராக்கங்களையும் பங்காளர் 5லதனக்கணக்கின்உடாக மேற்கொள்க.

4) 1.4.2013 இலிருந்த விஸவாவும் சந்துருவும் இலாபநட்டங்களை மூறையே 2:1 பகிர்வுசெய்வதுடன். சம்பளம் மூலதனவட்டி தொடர்பாக ஏற்கனவே செய்த உடன்படிக்கையில் மாற்றம் எதுவுமில்லை.

5) 31.3.2014 இல் முடிவடைந்த வரடத்திற்கான கொடக்கல்வாங்கல்கள் வருமாறு

| விபரம் | 000 |
|---|---|
| விற்பனை (60% கடன்அடிப்படை) | 6000 |
| கடன்பட்டோரிடம்பெற்றகாசு | 2500 |
| கொள்வனவுகள் (80% கடன்அடிப்படை) | 3000 |
| கடன்கொடுநரக்கான கொடப்பனவு | 1240 |
| செயற்பாட்டுக்குசெலுத்திய காசு | 520 |
| ஆதனம்பொறிஉபகரணதெய்வு | 1000 |
| பற்று (ஒவ்வொரு பங்காளரும் ரூ 60000 விதம்) | 120 |

6) 31.3.2014 உள்ள சரக்கிருப்பு ரூ 750000

**வேண்டப்படுவது**
**1) 31.3.2014 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று (பகிர்வுகள் உட்பட)**

**2)வியாபாரவருமதிகள், பொறப்பு பங்காளர்மூலதனக் கணக்கு நடைமுறைக் கணக்கு மீதிகளை காட்டும் 31.3.2014 இல் பிரித்தெடுக்கப்பட்ட நிதிநிலைமைக்கூற்று.**

**வினா இல 27**
*2013 August (New)*

மகேந்திரன் நரேந்திரன், ராஜிதன் ஆகியோர் இலாபநட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிரும் வியாபாரமொன்றின் பங்காளர்கள் 31.3.2012 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று.

| | | |
|---|---|---|
| ***நடைமுறையலாலாச்சொத்து*** | ***ரூபா 000*** | ***ரூபா 000*** |
| ஆதனம்பொறி உபகரணம் | 1000 | |
| திரண்ட பெறமானத்தேய்வு | (200) | 800 |
| **நடைமுறைச்சொத்து** | | |
| சரக்கிருப்பு | 200 | |
| வியாபாரகடன்பட்டோர் | 450 | |
| காசு | 60 | 710 |
| | | **1510** |
| மூலதனக்கணக்கு -மகேந்திரன் | 200 | |
| நரேந்திரன் | 400 | |
| ராஜிதன் | 200 | 800 |
| நடைமுறைக்கணக்கு- மகேந்திரன் | 150 | |
| நரேந்திரன் | 100 | |
| ராஜிதன் | 60 | 310 |
| ***நடைமுறையல்லாப்பொறுப்பு*** | | |
| நரேந்திரன் கடன் 5% | | 200 |
| ***நடைமுறைப்பொறுப்பு*** | | |
| கடன்கொடுநர் | | 200 |
| | | **1510** |

மேலதிக தகவல்கள்
1) 1.4.2012 இல் இராஜிதன் பங்குடமையிலிருந்து இளைப்பாறினார் இவருக்கு செலுத்தவேண்டிய தொகை கடனாக கருதவதற்கும் 5% வட்டி செலுத்துவதற்கம் உடன்பட்டது. இத்தினத்தில் பங்குடமையின் நன்மதிப்பானது ரூ 120000 மதிப்பிடப்பட்டதுடன் இது தொடர்பான சகல சீராக்கங்களும் பங்காளர் மூலதனக்கணக்கின்ஊடாக மேற்கொள்ளல்.

2) மமேந்திரனும் நரேந்திரனும் பின்வரும் நிபந்தனையின்கீழ் பங்குடமையை தொடர உடன்பட்டனர்.
   ஆ) ஒவ்வொரு பங்காளர்களும் ரூ 120000 சம்பளத்திற்கு உரித்துடையவர்கள்.
   ஆ) இலாபநட்டங்கள் சமனாக பகிரப்படும்.
3) இவ்வாண்டில் மமேந்திரனும் நரேந்திரனும் காசாகமுறையே ரூ 200000, ரூ 150000 தொகையை பற்றினர்.

4) பங்குடமையின் சகலவிற்பனைகளும் கொள்வனவுகளம் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டில் கடனபட்டோரிடமிருந்து ரூ 1800000 பெறப்பட்டதுடன் கடன்கொடுநருக்கு ரூ 900000 செலுத்தப்பட்டது.
5) இவ்வாண்டில் செலுத்தப்பட்ட செயற்பாட்டச்செலவு ரூ 350000
6) கடனமீதானவட்டி செலுத்தப்படல்வேண்டும்.
7) ஆதனம்பொறி உபகரணத்திற்கு வருடாந்தம் 20% தேய்விடப்படில் வேண்டும்.
8) 31.3.2013 இல் மீதிகள்

| | 000 |
|---|---|
| சரக்கிருப்பு | 275 |
| கடன்பட்டோர் | 500 |
| காசு | 260 |
| கடன்கொடுநர் | 300 |

**வேண்டப்படுவது**
**1) 31.3.2013 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று (பகிர்வுகள் உட்பட)**
**2) பங்காளர்மூலதனக் கணக்கு நடைமுறைக் கணக்கு**
**3) 31.32013 இல் ராஜிதன் கடன்கணக்கு**

வினா இல 28
*2012 August (New)*
பிரியா, ரமேஸ் என்போர் இலாபநட்டங்களை 3:2 என விகிதத்தில் பகிர்ந்து ஆலோசனை வழங்கும் நிறுவனமொன்றின் பங்காளர்கள். இப்பங்குடமையின் 31.3.2011 இல் உள்ள ஐந்தொகை.

| | | | |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச்சொத்து** | | **000** | **000** |
| ஆதனம் பொறி உபகரனம் கிரயம் | | 1300 | |
| திரண்ட தேய்வு | | (260) | 1040 |
| **நடைமுறைச்சொத்து** | | | |
| சரக்கிருப்பு காகிதாதி | | 100 | |
| ஆலோசனைக்கட்டனம் | வருமதி | 300 | |
| காசு | | 60 | 460 |
| | | | ***1500*** |
| **மூலதனக் கணக்கு** | | | |
| பிரியா | | 600 | |
| ரமேஸ் | | 400 | 1000 |
| **நடைமுறைக்கணக்கு** | | | |
| பிரியா | | 150 | |
| ரமேஸ் | | 150 | 300 |
| **நடைமுறைப்பொறுப்பு** | | | |
| அலுவலகச்செலவு சென்மதி | | | 200 |
| | | | **1500** |

**மேலதிக தகவல்கள்**

1) 1.4.2011 இல் சுதர்சன் பங்குடமையின் பங்காளராக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் இத்தினத்தில் ரூ 400000 காசை கெண்டுவந்துள்ளார். பங்குடமையின் நன்மதிப்பு 1.4.2011 இல் ரூ 100000 மாக மதிப்பிடப்பட்டுள்ளது இதுதொடர்ான எல்லா சீராக்கங்களும் பங்காளர் மூலதனக்கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படவேண்டும் ̇புதிய பங்குடமையில் பின்வரும் நிபந்தனைகளை பிரியா ரமேஸ் ஏற்றுக்கொண்டனர்.
அ) ஒவ்வொரு பங்காளர்களும் ரூ 10000 மாதச் சம்பளம் பெற உரித்துடையவர்கள்
ஆ) இலாபநட்டங்கள் ரமேஸ் பிரியா, சுதர்சன் ஆகியோருக்கிடையே 2:2:1 எனும் விகிதத்தில் பகிரவேண்டும்.

2) 31.3.2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுக்கொடுக்கல்வாங்களின் சுருக்கம் வருமாறு.

| | |
|---|---|
| **பெறுவனவுகள்** | **000** |
| ஆவோசனைக்கட்டனம் (31.3.2011 இல் வருமதியானதொகை உட்பட) | 1300 |
| சுதர்சனிடம் பெற்ற காசு | 400 |
| **கொடுப்பனவுகள்** | |
| காகிதாதி | 200 |
| சம்பளம் அலுவலக உத்தியோகத்தர் | 140 |
| அலுவலகச் செலவு | 400 |
| பற்றுக்கள் - பிரியா | 125 |
| - ரமேஸ் | 110 |
| - சுதர்சன் | 105 |
| 1.10.2011 இல் நிலையான வைப்பில் இட்டதொகை ரூ (வருடம் 12% வட்டி) | 500 |

3) பங்குடமையின் ஆதனம்பொறி உபகரணங்களுக்கு நோகோட்டுமுறையில் கிரயத்தில் 20%
4) 31.3.2012 இல் உள்ளபடியான நடைமுறைச்சொத்து நடைமுறைப்பொறுப்பு ஆகியன.
சரக்கிருப்பு காகிதாதி ரூ 50000
வருமதி ஆலோசனைக்கட்டனம் ரூ 150000

**வேண்டப்படுவது**
**1) 31.3.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று (பகிர்வுகள் உட்பட)**
**2) பங்காளர்மூலதனக் கணக்கு நடைமுறைக் கணக்கு**

**வினா இல 29**
*2012 August (old)*

ஆரவிந்தன், ஐயந்தன், கமலன் ஆகியோர் இலாபநட்டங்களை 2:2:1 என பகிர்வு செய்து பங்குடமையை நடாந்தி வருகின்றனர் 31.3.2011 இல் உள்ளவாறான ஐந்தொகை வருமாறு.

| | | |
|---|---|---|
| **நடைமுறையல்லாச்சொத்து** | **000** | **000** |
| ஆதனம் பொறி உபகரனம் கிரயம் | 2600 | |
| திரண்ட தேய்வு | (520) | 2080 |
| **நடைமுறைச்சொத்து** | | |
| சரக்கிருப்பு | 200 | |
| வருமதியாளர் | 750 | |
| ஐயக்கடன் ஏற்பாடு | (150) | |
| காசு | 520 | 1320 |
| | | ***3400*** |
| **மூலதனக் கணக்கு** | | |
| ஆரவிந்தன் | 800 | |
| ஜெயந்தன் | 600 | |
| கமலன் | 600 | 2000 |
| **நடைமுறைக்கணக்கு** | | |
| ஆரவிந்தன் | 300 | |
| ஜெயந்தன் | 300 | |
| கமலன் | 400 | 1000 |
| **நடைமுறைப்பொறுப்பு** | | |
| வியாபாரகடனடகொடுநர் | 300 | |
| அலுவலகச்செலவு சென்மதி | 100 | 400 |
| | | **3400** |

**மேலதிக தகவல்கள்**

1) 1.4.2011 இல் கமலன் பங்குடமையிலிருந்து இளைப்பாறினார் இத்தினத்தில் பங்குடமையின்நன்மதிப்பு ரூ 1000000 என ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இதுதொடர்ான எல்லா சீராக்கங்களும் பங்காளர் மூலதனக்கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படவேண்டும˙கமலனுக்கு செலுத்தவேண்டிய தொகை இவரின் கடன்கணக்கிற்கு 5மூ வட்டியுடன் மாற்ற ஒத்துக்கொள்ளப்பட்டது.
2) ஆரவிந்தனம், ஜெயந்தனும் பின்வரும் விதிமுறையின்கீழ் 1.4.2011 இல் இருந்து பங்குடமையை நடத்த உடன்பட்டனர்.
   அ) ஓவ்வொருபங்காளரும் வருடாந்தம் ரூ 120000 சம்பளம்பெற உரித்துடையவர்கள்.
   ஆ) ஓவ்வொருபங்காளரும் நன்மதிப்பை சீராக்கிய பின்னுள்ள மூலதனமீதிக்கு 10% வட்டி பெறஉரித்துடையவர்கள்.
   இ) பங்காளருக்கிடையே இலாபநட்டம் சமன்

3) 31.3.2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுக்கொடுக்கல்வாங்களின் சுருக்கம் வருமாறு.

| | |
|---|---|
| **பெறுவனவுகள்** | **000** |
| கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 3750 |
| **கொடுப்பனவுகள்** | |
| கடன்கொடுநருக்கு செலுத்தியது | 2200 |
| சம்பளம் அலுவலக உத்தியோகத்தர் | 300 |
| அலுவலகச் செலவு | 400 |
| விநியோகச்செலவு (1.4.2011 இலிருந்து 15 மாதங்களுக்கு) | 750 |
| பற்றுக்கள் - அரவிந்தன் | 200 |
| - ஐயந்தன் | 200 |
| கமலனுக்கு செலுத்திய வட்டி | 50 |

4) பங்குடமையின் ஆதனம்பொறி உபகரணங்களுக்கு நோகோட்டுமுறையில் கிரயத்தில் 10%

5) 31.3.2012 இல் உள்ளபடியான நடைமுறைச்சொத்து நடைமுறைப்பொறுப்பு ஆகியன.

| | 000 |
|---|---|
| சரக்கிருப்பு | ரூ 800 |
| வருமதியாளர் | ரூ 500 |
| அலுவலகச் சென்மதி | ரூ 200 |
| கடன்கொடுநர் | ரூ 100 |
| காசு | ரூ 160 |

6) வருட இறுதிகடன்பட்டோர் மீதியில் ஐயக்கடனுக்கு வருடாந்தம் 20மூ ஏற்பாடுசெய்வது பங்குடமையின் கொள்கையாகும்.

**வேண்டப்படுவது**

**1) 31.3.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று (பகிர்வுகள் உட்பட)**

**2) பங்காளர்மூலதனக் கணக்கு நடைமுறைக் கணக்கு**

**3) 31.3.2012 இல் உள்ள ஐந்தொகை**

**வினா இல 30**

*2011 August (New)*

சுகந்தி பிரியா என்போர் பின்வரும் உடன்படிக்கையின் கீழ் பங்குடமையொன்றை நடாத்தி வருகின்றனர்

- மாதாந்தச் சம்பளம் முறையே சுகந்தி பிரியா என்போர் முறையே ரூ 20000, ரூ 15000 செலுத்தப்படுகின்றது.
- மூலதனத்திற்கு மாதாந்த வட்டியாக சுகந்தி பிரியா முறையே ரூ 5000, ரூ 10000
- இலாபநட்டங்கள் சுகந்தி பிரியா ஆகியோருக்கிடையே சமனாக பகிரப்படும்
- பங்குடமையினால் செய்யப்படும் பங்காளர் சொந்தச் செலவுகள் பங்காளர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வினோத் என்பவர் 31.3.2011 இல் புதிய பங்காளராக சேர்த்துக்கொள்ளப்பட்டார் இவர்சேரும்போது ரூ 1200000 காசாகவும் ரூ 800000 ஒப்புக்கொண்ட விலையான மோட்டடார் வாகனத்தையும் பங்குடமைக்கு கொண்டுவந்துள்ளார் அதன் பின்னர் எல்லாப் பங்காளர்களும் இலாபநட்டங்களை சமனாக பகிர ஒப்புக்கொண்டனர். 31.3.2011 இல் பங்குடமையின் நன்மதிப்பானது ரூ 150000 என ஒத்துக்கொள்ளப்பட்டது. இது தொர்பான சீராக்கங்களை பங்காளர் மூலதனக் கணக்குகளில் செய்யப்பட வேண்டும்.

31.3.2011 இல் உள்ளவாறான காசுப்புத்தக சுருக்கம் வருமாறு

| | 000 | 000 |
|---|---|---|
| 1.4.2010 இல் மீதி | | 400 |
| **பெறுவனவுகள்** | | |
| கடன்பட்டோரிம் சேகரிப்பு | 6100 | |
| வினோத் மூலதனம் | 1200 | |
| வங்கிக்கடன் | 1300 | 8600 |
| | | 9000 |
| **கொடுப்பனவுகள்** | | |
| கடன்கொடுநருக்கான கொடுப்பனவு | 4200 | |
| செலவுகள் | 2350 | |
| உபகரணம் | 500 | |
| சம்பளம் சுகந்தி | 200 | |
| பிரியா | 150 | |
| மூலதனவட்டி சுகந்தி | 40 | |
| பிரியா | 100 | |
| பற்று – பிரியா | 125 | |
| சுகந்தியினால் செய்யப்பட்ட செலவு மீளளிப்பு | 50 | |
| பிரியாவின் வீட்டு மிசாரமக் கொடுப்பனவு | 40 | |
| சுகந்தியின் பிள்ளையின் தனியார் வகுப்பு கட்டனம் | 25 | |
| எரிபொருள் மீள்கொடுப்பனவு - சுகந்தி | 150 | |
| - பிரியா | 70 | 8000 |
| | | 1000 |

**மேலதிக தகவல்கள்**

1.4.2010 இல் மொத்த உரிமையாண்மை மூலதனக் கணக்கு மீதிகள்

சுகந்தி 000 பிரியா 000

| | | |
|---|---|---|
| மொத்த உரிமையாண்மை | 2800 | 2600 |
| மூலதனம் | 2000 | 2500 |

2) 31.3.2011 இல் வங்கிக் கடனுக்கு வட்டி ரூ 10000 செலுத்த வேண்டும்

3) வருடத்திற்கான ஆதனம் பொறி உபகரணத் தேய்வு 175000

4) 31.3.2010 இல் உள்ள பொறுப்பு மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் (காசு தவிர)

| | 000 |
|---|---|
| கடன்கொடுநர் | 300 |
| சென்மதிச் செலவு | 40 |
| சரக்கிருப்பு | 225 |
| கடன்பட்டோர் | 360 |
| முற்கொடுப்பனவு | 15 |

5) 31.3.2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பொறுப்பு மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் (காசு, சென்மதி வட்டி தவிர்ந்த) என்பவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு அல்லது குறைவு

| | 000 |
|---|---|
| வங்கிக்கடன் | 1300 |
| கடன்கொடுநர் | (20) |
| சென்மதிச் செலவு | 25 |
| சரக்கிருப்பு | (15) |
| கடன்பட்டோர் | 40 |
| முற்கொடுப்பனவு செலவு | 5 |

வேண்டப்படுவது

1) 31.3.2011 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று

2) பங்காளரிடையெ இலாபம் நட்டம் பகிரப்படுவதை காட்டும்கூற்று

3) பங்காளர் நடைமுறைக் கணக்கு

4) 31.3.2011 இல் உள்ளவாறான ஐந்தொகை


# MR. V.S.THIRUKUMARAN
# J/ VAYAVILAN CENTRAL COLLEGE
# VAYAVILAN
# JAFFNA
# TP NO 0776158080
# VIBER NO 0779109623
# WHATSAPP 0776158080